


அறைவு 02 இயம் 44 June 28 - July 04, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
# MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

வரலாற்றைப் படைத்துள்ள மலைமுரசு
**100 பதிப்பு இன்று**

# சம்பூர் மின் பணியைத் தொடங்க சூழல் ஆய்வறிக்கை

சம்பூரில் மின்நிலையப் பணிகளைத் தொடங்குவதற்கு சூழல் ஆய்வறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என உரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் கடைசிப் பகுதியில் இந்திய தேசிய மின் உற்பத்தி நிறுவனத்திற்கும் இலங்கை மினசக்தி அமைச்சிற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட செயற்படு ஒப்பந்தத்தின் பிரகாரம் சூழல் ஆய்வறிக்கையைப் பெற்றதன் பின்னரே மின் நிலையக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும்என அவர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே சூழல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதனை எழுத்து மூலமான அறிக்கை தயாரித்தளிக்கப்பட இன்னும் சில நாட்கள் பொறுத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள....... 13



## அனைத்துத் தாய்மாருக்கும் எச்.ஐ.வி தொற்றுப் பரீட்சை



தாய்மையடைந்த சகல பெண்களுக்கும் எச்.ஐ.வி தொற்றுப் பரீட்சிப்பை எதிர்வரும் 2015ம் ஆண்டின் முடிவிற்குள் நிகழ்த்த விருப்பதாக தேசிய பால்வினைத் தொற்றுத் தடுப்புத் திட்டம் அறிவித்துள்ளது.

அத்திட்டத்தின் புள்ளவிபரங்களின் படி பெற்றோரில் இருந்து பிள்ளைக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படும் வீதம்....... 13

## கிழக்குக் கடற் பிரதேசத்தில் எண்ணை அகழ்வு

கிழக்குக் கடற்பிரதேசத்தில் எண்ணை ஆகழ்வு ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கபடவுள்ளன என சனாதிபதி அறிவித்துள்ளார்.

இந் நடவடிக்கையை இலங்கை அரசின் பெற்றோலிய வள அபிவிருத்திக் குழு பிரான்சின் முன்னணி நிறுவனமும், உலகத் தரப்படுத்தலில் எண்ணை ஆராய்ச்சியில் முன்னணியிலுள்ள ஆறு நிறுவனங்களில் ஒரு நிறுவனமான "டோட்டல் ஈ அன்ட் பி அக்டிவிட்டீஸ் பெற்றோலியர்ஸ்" நிறுவனத்துடன் இணைந்து களஆய்வுப் பணிகளை முன்னெடுக்க உள்ளது.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு வரையான கடற்படுக்கைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட..... 13

## அரச குறும்பாதீடு - நவம்பரில் தெரியும் தேர்தல் திகதிகள்

இலங்கைத் திறைசேரியானது குறுங்காலப் பாதீடொன்றைத் தயாரித்தளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இப் பாதீடானது எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது வேறு வழியின்றி அரசு தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பதை வெளியிட வேண்டியிருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அடுத்துவரும் நிதியாண்டின் சில மாதங்களுக்கு மட்டும் இப்பாதீடு உருவாக்கப்பட்டிருக்குமாயின்..... 13

## வறுமையில் கிழக்கு 2ம் இடம்


வறுமைத் தரப்படுத்தலில் மாகாணங்களிடையே வறுமை கூடிய மாகாணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கிழக்கு மாகாணம் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் இரண்டாவது வறுமை கூடிய மாகாணமாகவும் கிழக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது.


இத்தகவலை மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா மட்டக்களப்பில்...... 13

## மெதடிஸ்த கல்லூரியின் இரு நூற்றாண்டு விழாவில் ஆளுனர்

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் இருநூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்க கிழக்கின் ஆளுனர் அந்நிகழ்விற்கு வருகைதரவுள்ளார்.

கல்லூரியின் இருநூற்றாண்டு விழா இவ்வருடம் கொண்டாடப்படுவதையொட்டிய சிறப்பு நிகழ்வுகள் நாளை (29) கல்லூரி அரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அந்நிகழ்வில் பிரதம விரருந்தினராக ஆளுனர் கலந்துகொள்ளவுள்ளார்.




Digitized by Noolaham
noolaham.org | aa

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# சம்பூர் மீள்குடியேற்றம் சாத்தியமற்றது
## - மின்சக்தி அமைச்சர் -



சம்பூரில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் இனி அப்பிரதேசத்தை நிரந்தரமாக மறந்து விட வேண்டியதுதான் என்று அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

மின்கட்டணத்தை அளவிடும் டிஜிட்டல் மீட்டர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

சம்பூர் பகுதியில் திட்டமிட்டபடி அனல் மின் நிலையம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கை மின்சார சபை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்குவதைத் தடுப்பதற்கும், பொதுமக்களுக்குத் தேவையான மின்சாரத்தைத் தடையின்றி பெற்றுத் தருவதற்கும் இவ்வாறான செயற்திட்டங்கள் அவசியமானது.

இதன் காரணமாக அப்பகுதியில் குடியிருந்த சிலர் இடம்பெயர நேர்ந்துள்ளது உண்மைதான். எனினும் அவர்கள் மாற்று இடங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். மீண்டும் சம்பூர் தான் வேண்டும் என்று அடம் பிடிக்கக் கூடாது. நாட்டின் அபிவிருத்திக்காக இது போன்ற விட்டுக் கொடுப்புகள் அவசியம் என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# என்று மடியும் இந்த இனவன்முறை

ஈழத்தின் அழியாத விதியாக இனவன்முறை தலைவிரித்தாடி வருகின்றது. இனத்தினைப் பிரிக்கும் அளவுகோலாக மதம் தனது வேரினைப் பதித்துள்ளது எம் மனதில். மதத்தால் இணைய முற்படும் போது இனத்தாலும், இனத்தால் இணைய முற்படும் போது மதத்தாலும் பிரிவினை எம்மை இணைய விடாது மென்மேலும் பிரிவையும் குரோதத்தையும் எம்முள்ளே பரப்பிவிடுகின்றது.

இவ்வின வன்முறைகளுக்கு அடிப்படையான காரணம் எது எனத் தலைமுறைகளாகத் தேடியபோது கிடைக்கும் பதில்... ஒரு இனத்தின் மீது மற்றைய இனம் அச்சங்கொண்டிருப்பதே என்பது தெரிகின்றது.

அச்சத்தின் காரணமாக மற்றைய இனத்தை ஒரு இனம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முனைகின்றது. தேசிய வளங்களையும், வாய்ப்புக்களையும், வாழ்வாதாரங்களையும் ஏனையவர்களுடன் பங்குபோட முன்வராத நிலையில் ஒரு இனம் வாழத் தலைப்படுகின்றது.

ஏனைய இனங்களோ தமக்குரிய பங்கு கிடைக்காத போது தாம் ஓரங்கட்டப்படுவதாக அச்சம் கொள்கின்றது. அவ்வச்சத்தை நீக்க தமக்கான பங்குரிமையை மற்றைய இனம் உரித்துடன் கேட்க முனைகின்றது. இவ்வாறு உரிமைக் கோரிக்கை எழும்போது மறுத்த இனம் அச்சங்கொள்கின்றது.

இரு இனங்களும் தாம் ஒரே தேசத்தவர் என்பதை மறந்து ஒருவர் மீது ஒருவர் அச்சங்கொள்ளவதால் அடுத்தவரை அடக்க அவர்களை அழித்தல் என்பதே சரியானது என்பதை அவர்களே தமக்குள் வரித்துக் கொள்கின்றனர்.

இக் கொள்கை வரிப்பு அடக்கமுடியாத இனத்துவேசத்தை ஏற்படுத்தி இன வன்முறைகளை உருவாக்க அவ்வினங்கள் இடையே விரிசலை மேலும் ஆள, அகலமாக்கிவிடுகின்றது.

இதனையே கடந்த 35 ஆண்டுகளாக இந்த நாடு அனுபவித்தது. எனினும் கடந்த ஐந்து வருடத்திற்கு முன் மிலேச்சத்தனமான கொலைகளுடன் அக்கண்ணீர்க்கதை முடிந்தது என நினைத்திருந்த வேளை அதன் தொடர்ச்சி அல்லது அடுத்த பாகம் ஆரம்பமாகியுள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது.

இந்த இன வன்முறைப் புத்தகத்தை மூடிப் பொதியிட்டு மயானமொன்றில் புதைக்காமல் அப்புத்தகத்தின் புதிய பாகங்களை வரைந்திட முயலும் கேவலமான அரசியல் இங்கு கோலோச்சுகின்றது.

எமது அழிவைத் தீர்மானிப்பவர்களை நாமே தெரிந்தெடுத்தோம் என எண்ணும்போது வெட்கித் தலைகுனியும் சமூகமாக இலங்கையர் உலகின் முன் நிற்கின்றார்கள்.

உலகத்தவரோ எமது பலவீனத்தில் தமது தேசநலனுக்கான காய்களை நகர்த்துகின்றார்கள்.

இனவன்முறைகளைத் தீர்க்க வேண்டிய கட்டாயம் எம்முன்னே எழுந்து நிற்கின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் இவ்வின வன்முறை இல்லாது ஒழியவேண்டும் என எண்ணினால் மட்டுமே இதனை இல்லாதொழிக்க முடியும். எனினும் முகாமைத்துவக் கருதுகோளின்படி கட்டமைப்பு ஒன்றினுள் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அக்கட்டமைப்பின் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் சர்வவல்லமை பொருந்தியவரின் மனநிலையில் அம்மாற்றம் நிகழ வேண்டும். அவ்வாறு நிகழுமாயின் அம் மாற்றம் ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடும்.

இனவன்முறை இலங்கையில் இருந்து இல்லாதொழிக்கப்படவேண்டுமாயின் சர்வவல்லமை பொருந்திய அந்தத் தலைமையின் மனதில் மாற்றம் உண்டாக வேண்டும்...... உண்டாகுமா????

# வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு லைக்கா மொபைல் 3000 மில்லியன் முதலீடு
## மட்டு நிர்வாக அலுவலகம் திறப்பு

இலங்கையின் வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வாழ்வாதார மூலத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல், கல்விமேம்பாட்டினை ஏற்படுத்தல் போன்ற ஆக்கபூர்வமான பல திட்டங்களை இலக்குவைத்து, 3000 மில்லியன் ரூபாய்கள் நிதியீட்டத்துடன் லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் இரண்டாம் கட்டப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

ஆக்கபூர்வமான பல திட்டங்களை இலக்குவைத்து பாரிய நிதியீட்டத்துடன் கூடிய இந்த மக்கள் நலன்புரித் திட்டங்களை நேர்த்தியாக மேற்கொள்ளும்பொருட்டு, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பிராந்தியக் காரியாலயங்களை லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் போசகர் திருமதி ஞானாம்பிகை அல்லிராஜா, லைகாவின் ஞானம் அறக்கட்டளை மற்றும் லைகா மொபைல் நிறுவனத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன், லைகா மொபைல் நிறுவனத்தின் பிரதித் தலைவர் பிறேம் சிவசாமி ஆகியோர் கடந்த வியாழக்கிழமை வைபவரீதியாகத் திறந்துவைத்தனர்.

மட்டக்களப்பு புதிய வன்னியர் வீதியில் அமைந்துள்ள பிராந்தியக் காரியாலயத்தினை இன்று வியாழக்கிழமை காலை திறந்துவைத்த இவர்கள், மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் பயனாளிகளுக்கான அன்பளிப்புப் பொருட்களையும் கையளித்தனர். இந்த நிகழ்வில் பயனாளிகள், சமூக முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வீடுகளை இராணுவம் கையளித்தது

மட்டக்களப்பு, போரைத்தீவுப்பற்று வெள்ளாவெளி கிராமத்தில் இராணுவத்தினரிடமிருந்த 05 வீடுகள், உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வெள்ளாவெளி பகுதியில் ஏற்கனவே மீள்குடியேற்றம் நிறைவடைந்திருந்த நிலையில் இந்த 05 வீடுகளில் மாத்திரம் இராணுவத்தினர் தங்கியிருந்ததாக போரைதீவுப்பற்று பிரதேச செயலாளர் நல்லையா வில்வரட்ணம் தெரிவித்தார்.

கையளிக்கப்பட்டுள்ள வீடுகளில் விரைவில் மக்கள் குடியேறுவார்கள் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

# புலமைப் பரிசிற் பரீட்சை வினாத்தாள் மாற்றம்

எதிர்வரும் ஆண்டிலிருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாப்பத்திரம் ஒரு வினாப்பத்திரத்தை மாத்திரமே கொண்டிருக்கும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை 1 மணித்தியாலமா? அல்லது ஒன்றரை மணித்தியாலமா நடைபெறும் என்பதைத் தற்போதுவரை தீர்மானிக்கவில்லை எனத் தெரிவித்த அவர் புலமைப் பரீட்சைகள் நிறுத்தப்பட மாட்டாது எனவும் வருடாந்தம் ஒகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்

## இருமுறை தோல்வியடைந்த காரைதீவு பிரதேசசபைப்
# பாதீடு நிறைவேற்றப்பட்டது

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள காரைதீவு பிரதேசசபை வரலாற்றில் இருமுறை தோற்கடிக்கப்பட்டு தவிசாளரின் பதவி பறிபோகக்காரணமாயமைந்த 2014ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று புதன்கிழமை வருகைதந்த அனைத்து உறுப்பினர்களின் சம்மதத்துடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மூன்றாவது தவிசாளரான யோகரெத்தினம் கோபிகாந் நேற்று 25ஆம் திகதி புதன்கிழமை சுபநேரத்தில் தமது கன்னிஅமர்விற்கு தலைமைதாங்கி பட்ஜெட்டைச் சமர்ப்பித்தார்.

உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்தனர். இதன்படி பட்ஜெட் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அநீதிகளை, தவறுகளை, மோசடிகளை, பொறுக்கமுடியவில்லையா?.....

அழையுங்கள் மலைமுரசை...!

இரகசியம் காக்கப்படும்
075 4252042

## மட்டு ஊடகவியலாளருடன் மலைமுரசின் சந்திப்பு எதிர்வரும் 06ம் திகதி

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றை மலைமுரசு நடாத்தவுள்ளது. எதிர்வரும் 06.07.2014 அன்று மாலை தேர்ந்தெடுக்கப்பட்ட இடமொன்றில் இச் சந்திப்பு நடைபெறவிருப்பதாக மலைமுரசின் ஆசிரிய பீடம் தெரிவித்துள்ளது.

மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் இச்சந்திப்பில் அனைத்து ஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சந்திப்பு நடைபெறும் இடம் தொடர்பாக மட்டக்களப்பின் சிரேட்ட ஊடகவியலாளர் அதிரனையோ அல்லது மகுடம் ஆசிரியர் கொலினையோ தொடர்புகொண்டு அறிய முடியும். அன்றேல் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் மலைமுரசில் கூட்டம் நடைபெறும் இடம் அறியத்தரப்படும்என ஆசிரிய பீடம் தெரிவித்துள்ளது.

"பிராந்தியப் பத்திரிகையொன்றின் தேவையும், தாக்கமும்" என்ற கருப்பொருளில் இக்கலந்துரையாடல் நடைபெறும் எனத் தெரிகின்றது.

# மனைவிமீதான காதலை நிரூபிக்க மர்ம உறுப்பில் நெருப்பு வைத்தவர் வைத்தியசாலையில்....!

மனைவி மீது தனக்குள்ள காதலை நிரூபிப்பதற்காக தனது பிறப்புறுப்பில் தீவைத்தவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் பதிவாகியுள்ள இச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இந்நிலைக்-காளாகியுள்ளார்.

அவரது கைத்தொலைபேசிக்கு தவறுதலாகப் பெண்ணொருவரால் அழைப்பெடுக்கப்பட்டுள்ளது. அப்போது அருகிலிருந்த அவரது மனைவி இவ்விடயத்தைப் பெரிதாக்கி அப் பெண்ணுடன் குறித்தவருக்குத் தொடர்பு இருப்பதாக சண்டையிட்டுள்ளார்.

அதனையடுத்து தனது மனைவி மீது தனக்கிருக்கும் காதலை நிரூபிக்க குறித்தவர் இம்முடிவை எடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது பல சேனாவின் குற்றம் : எங்களுடைய அவமானம்!

**ஒரு பெண் பத்திரிகையாளரின் பார்வையில் "அளுத்கம ". (மூலக்கட்டுரை – திஸராணி குணசேகர )**

**- இந்த நாட்டில் நாங்கள் இன்னமும் சிங்கள காவல்துறையை வைத்திருக்கிறோம். சிங்கள இராணுவம் இருக்கின்றது. இன்று ஒரு மரக்கலயா (marakkalaya) அல்லது பறையா (paraya) ஒரு சிங்களவனை தொட்டாலும் ……… அதுவே அவர்களுடைய முடிவாகும் - கலகொட ஞானதாஸ தேரர் (15-6-2014) அளுத்கமவில்.**

**- தன்னுடைய கைகளையும் கால்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்-பவனை. சுய கட்டுப்பாடுள்ளவனை. பிக்கு என கூறுங்கள் -புத்தர்….**

மேடையில் கலகொட ஞானதாஸ தேரர் உரையாற்றிக் கொண்டிருக்கிறார், வாயிலிருந்து நெருப்பும் நஞ்சும் கொட்டுகிறது. கீழே பெருமளவு மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் பொதுமக்களும் பௌத்த துறவிகளும் உள்ளனர். இன்னும் சில மணிநேரத்தில் அவர்கள் வெறியாட்டம் ஆடப் போகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை, அவர்கள் வணங்கும் பாணியில் கைகளை வைத்திருக்கின்றனர். அவர்களுடைய முகங்களை பார்க்கும் போது அவர்கள் அரசியல் உரையொன்றை கேட்கவில்லை மத உரையொன்றை அவதானிப்பது போல உள்ளது.

அங்கு ஜிகாத் போராளிகளும், புனித போராளிகளும் அமர்ந்திருக்கின்றனர், ஆனால் அவர்கள் இங்கு மஞ்சள் ஆடையணிந்துள்ளனர். தங்களை பௌத்த துறவிகள் என அழைக்கின்றனர்.

முழுமையாக ஆயுதம் ஏந்திய பொலிஸாரும் இராணுத்தினரும் உரையை கேட்டபடி கண்காணித்தபடி உள்ளனர், தேரர் மெல்ல மெல்ல பொதுமக்களை உணர்வூட்டுகின்றார், சட்டத்தை மீறுமாறு மக்களை கேட்கிறார், அவர் மிரட்டுகிறார் எச்சரிக்கிறார், அவரது வார்த்தைகள் கூர்மையான ஆயுதங்களை போல வந்து விழுகின்றன.

ஆனால் சட்டத்தின் பாதுகாவலர்கள் இன்னமும் அதை கேட்டபடியுள்ளனர். அவரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவில்லை.அவரை எங்கு வைக்க வேண்டுமோ- சிறையில் வைக்கவில்லை பொலிஸார் செயற்படவில்லை, சட்டம் மரணித்து விட்டது போல தோன்றுகிறது. வன்முறையையும் கசப்புணர்வையும் விதைப்பவர்கள் கையில் மேடையுள்ளது.

புனிதப் போர்களில் ஈடுபடுபவர்கள் யாராக, யாருக்கெதிராகயிருந்தாலும் அது நரகமே, பௌத்தத்தின் உண்மையான இயல்பு காரணமாக நாடு அதை மாத்திரம் அனுபவிக்காமல் இருந்தது. ஆனால் இனிமேலும் அப்படியில்லை, அது தீமைகள் நிறைந்த ராஜபக்ச பௌத்தமாக முழுமையாக உருமாறியுள்ளது.

கலகொட ஞானதாஸ தேரர் அதன் இறைதூதர், தலைமை மதகுரு. அது சந்தேகம் மற்றும் வெறுப்புணர்வின் மதம், வன்முறையை நம்பிக்கையாக கொண்டது நச்சுத்தன்மை வாய்ந்தது. படுகொலைகள் பாரிய வன்முறைகள் மீது நம்பிக்கை கொண்டது.

**பேரணிக்கு யார் அனுமதி வழங்கியது..**

முதலில் நடந்த சம்பவம் தற்செயலானவொன்று, பௌத்த மதகுரு மற்றும் அவரது வாகன சாரதி மீது மேற்கொள்ளப்பட்டதாக குற்றம்சுமத்தப்படும் தாக்குதல் தற்செயலாக இடம்பெற்றவொன்று, தற்போதைய இரத்த வெறியாட்டத்தில் இது மாத்திரமே தற்செயலான செயல், மற்றவை எல்லாம் நன்கு திட்டமிடப்பட்டவைகள். பொது பல சேனா வன்முறையை தூண்டியது, அதிகாரிகள் அதனை தடுக்காமல் வேடிக்கை பார்த்தனர் அனுசரனை வழங்கினர்.

ஆரம்ப கட்ட வன்முறைகளுக்கு பின்னர் சற்று அமைதி நிலவியது. பின்னர் தீடிரென யாரோ இன்னமும் பதட்டம் குறையாமலிருந்த அளுத்கமவில் பொதுபல சேனா பேரணியை நடத்த அனுமதித்தனர், அந்த முடிவை யாரோ மனநிலை பாதிக்கப்பட்டவர், சட்டம். மனிதாபிமானம் இவையெல்லாம் தெரியாதவர் எடுத்திருக்க வேண்டும்.

இவ்வாறான முக்கியமான முடிவை சாதாரண காவல் அதிகாரியோ அல்லது காவல்-மா அதிபரோ எடுத்திருக்க முடியாது. மிக உயர் பதவியிலிருப்பவரே இதற்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும்.

மிக உயர்பதவியில் ஜனாதிபதி மகிந்த இருக்கிறார், பொலிவியாவிலிருந்து முழுமை பெறாத டுவிட்களை செய்கிறார், வன்முறையையும் வன்முறையை பயன்படுத்துபவர்களையும் கண்டிப்பதற்கு பதில் – அவரது சகோதரர்கள் பொதுபல சேனா சட்டவிரோத பேரணியை நடத்தவில்லை, அவர்கள் சட்டவிரோத ஆர்ப்பாட்டத்தை நடத்தவில்லை, அவர்கள் பேரணியையும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தவதற்கு அதிகாரிகள் அனுமதித்துள்ளனர். இதற்கு அனுமதித்திருக்காவிட்டால் அளுத்கம வழமைக்கு திரும்பியிருக்கும். அப்பாவி உயிர்களை காப்பாற்றி இருக்கலாம்.

அதிகாரத்தில் இருப்பவர்களின் நோக்கம் என்ன? சிறிய கலவரம்? கட்டுப்படுத் தப்பட்ட கலவரம்? சிறிய அளவிலான கறுப்பு யூலை? அரசால் வழிநடத்தப்படும் கலவரம்? தங்கள் சொற்களையும் செயல்களையும் கட்டுப்படுத்துமாறு சிறுபான்மையினருக்கு எச்சரிக்கை? முஸ்லீம் தமிழர் கிறிஸ்தவர்களுக்கு நீங்கள் எதனையும் எதிர்க்க முடியாது என்ற எச்சரிக்கை? சிங்கள பௌத்தர்களின் கவனத்தை திசைதிருப்ப புதிய எதிரியை உருவாக்குதல்? நாங்களும் முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள் என மோடிக்கும் மேற்குலகிற்கும் காண்பித்தல்? இவை எல்லாமா? அல்லது ஒன்றிரண்டா?

இல்லாவிட்டால் சிறு நெருப்பை ஊதி பற்றவைக்க பொதுபலசேனாவிற்கு அனுமதியளித்தது யார்? ஏன் பொலிஸாரும் இராணுவத்தினரும் இதனை தடுக்கவில்லை. நான் கறுப்பு யூலை முழுவதும் பார்த்திருக்கிறேன். சிங்கள இனத்தை சேர்ந்தவர் என்ற வகையில் மீண்டும் அந்த கொடுமை நிகழ்வதை பார்க்க விரும்பவில்லை. ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட கலவரங்களை இந்த ஆட்சியின் கீழ் காணமுடிகின்றது. இவ்வாறான சிறிய கலவரங்கள் ஒரு நாள் கட்டுக்கடங்காதவையாக மாறலாம்.

இது சிறுபான்மையினருக்கான நாடல்ல, ஒழுக்கம்மிக்க சிங்கள பௌத்தர்களுக்கான நாடுமல்ல, இது சட்ட ஒழுங்கின்மையின்மையின் சொர்க்கம்.

இன்னும் இடம் பெறப்போகின்ற, இடம்பெற்ற வன்முறைகளுக்கும் மரணங்களுக்கும், பொது பல சேனாவும் ராஜபக்சாக்களும் பொறுப்பேற்க வேண்டும். இது அவர்களுடைய செயல், இது அவர்களுடைய மன்னிக்க முடியாத குற்றம்.

நாங்கள் அவர்களை தேர்ந்தெடுத்தோம். நாங்கள் அவர்களை சகித்துக் கொண்டோம், அது என்றென்றும் நாங்கள் வெட்கப்படவேண்டிய விடயம்.

தமிழில். நன்றி -ரஜீவன்-

---

# வாராந்த அலசல்

**செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்**

# யார் இந்த அல்-பஹ்தாதி

கடும்போக்கு வாத இஸ்லாமிய நாடொன்றைக் கட்டியெழுப்பும் நோக்குடன் உறுதியான போராட்டத்தை முன்னெடுத்து உள்ள சுன்னி முஸ்லிம்களின் ஆதர்சனத் தலைவராக அல்-பஹ்தாதி மத்திய கிழக்கில் உருவாகி வருகின்றார்.

மேற்கு ஈராக்கிலிருந்து புறப்பட்ட இவரது வெற்றிப் பயணம் ஈராக்கின் பிரதான வருமானமீட்டும் எண்ணை வயலொன்றைக் கைப்பற்றித் தொடரும் அதே வேளையில் உள்நாட்டுப் போரினால் அழிவடைந்து வரும் கிழக்கு சிரியாவின் பிரதேசங்கள் பலவற்றையும் அல்-பஹ்தாதியின் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.

அல்-பஹ்தாதியின் தலைக்கு அமெரிக்கா வைத்துள்ள விலை பத்து மில்லியன் அமெரிக்க டொலர்கள்!!! ஆனால் அல்-பஹ்தாதி தொடர்பாக அமெரிக்காவிடம் இருக்கும் தகவல்களோ மிக மிக குறைவானவையே...

சிரியாவில் உள்நாட்டுக் கலவரங்கள் வெடித்திருந்த போது அமெரிக்க படைகள் ஈராக்கை விட்டு வெளியேறின. இரு நாடுகளும் பலவீனப்பட்டிருந்த நிலையில், அதன் தலைவர்கள் மீது மக்கள் செல்வாக்கிழந்திருந்த நிலையில், அல்-பஹ்தாதி ஆயுதப் போரைத் தொடங்கி பிரதேசங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அவரது தந்திரோபாயம் மெய்ச்சப்படுகின்றது.

மன்னிப்பு என்ற வார்த்தை அல்-பஹ்தாதி யின் அகராதியிலும் அவரது படைகளின் பணிக் குறிப்பிலும் அகற்றப்பட்டுள்ளது. எதிரிகளையும், துரோகிகளையும் இன, மத பேதமின்றிக் கொலை செய்துவிடும் படைகளே இஸ்லாமிய சட்டதிட்டங்களைத் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நிலைநிறுத்திவருகின்றன.

அல்-பஹ்தாதி கலாநிதிப் படிப்பை இஸ்லாமியக் கற்கைகளில் நிறைவுசெய்துள்ளார். அல்குவேதாவுடன் இணைந்து போராட்டத்தில் குதித்த அவரின் ஆளுமை, தந்திரோபாயம், இரக்கமற்ற பண்பு ஆகியன அவரை அல்குவேதாவின் முக்கிய தளபதிகளில் ஒருவராக 2010 ல் உயர்த்தியது.

சிரியாவில் உள்நாட்டுக் கலவரங்கள் அந்நாட்டு சனாதிபதிக்கு எதிராக வெடித்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட அல்-பஹ்தாதி தனது திட்டப்படி சிரியாவில் அல்-கொலானியைத் தளபதியாகக் கொண்டு அல்குவேதாவின் நுஸ்ரா முன்னணி என்ற போராட்ட அமைப்பை உருவாக்கினார். சிரியாவில் நடைபெற்ற கார்க்குண்டுக் கொலைத்தாக்குதல்களால் நுஸ்ரா முன்னணி சிரிய மக்களின் ஆதரவை வெகுவாகப் பெற்றுக்கொண்டது. இவ்வாதரவிற்குப் பின் அல்-பஹ்தாதியின் தலைமைத்துவத்தை அல்-கொலானி நிராகரிக்க முனைந்த போது அங்கு நுஸ்ரா முன்னணிக்கு எதிரான போரை அல்-பஹ்தாதியின் படைகள் ஆரம்பித்தன.

கடும்போக்குவாத இஸ்லாமிய நாட்டைக் கட்டியெழுப்பும் ஒசாமா பின்லேடனின் கனவை நிறைவேற்றத்தக்கவர் என அல்-பஹ்தாதியை கடும்போக்கு முஸ்லிம் ஆதரவு மக்கள் நினைப்பதே அவருக்கான பெரும் படைப்புலமாக இருக்கின்றது.

இந் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு நுஸ்ரா படைகளைத் துவம்சம் செய்த பஹ்தாதிகள் அதே நேரத்தில் ஏனைய முஸ்லிம் ஆயுதக் குழுக்களையும் சிரியாவில் கருவறுக்கும் போர்களில் 2012 -13 காலப்பகுதியில் ஈடுபட்டனர்.

இப்போர்களின் முடிவில் சிரியாவின் மாகாணங்களில் ஒன்றான ரக்கா என்னும் மாகாணத்தை முழுமையாக முதன் முதலில் தமது கட்டுக்குள் கொண்டு வந்த அல்-பஹ்தாதியினர் அங்கு கடும்போக்கு முஸ்லிம் சட்டத்தை அமுலாக்கினர்.

அவர்கள் அம்மாகாணத்திற்கு அடுத்துள்ள டெயிர்-அல் சோர் மாகாணத்தின் மீது ஆறுவாரகாலப் போரைத் தொடுத்து அறுநூற்றுக்கும் மேற்பட்ட போராளிகளைக் கொன்று தமது ஆதிக்கத்தை அங்கு உறுதிப்படுத்திய அல்-பஹ்தாதியினருக்கு அங்கு வருமாத்தை அள்ளித்தரும் எண்ணை வயல்கள் காத்துக் கிடந்தன. இவ்வயல்களிலிருந்தே பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான மசகு எண்ணை கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றது.



ஈராக்கில் அல்-பஹ்தாதியினரால் வெல்லப்பட்ட மொசூல் நகரில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாலும், அப்பிரதேசத்திலிருந்து உள்வாங்கப்பட்ட படையணிகளாலும் வலுப் பெற்றிருந்த அல்-பஹ்தாதியின் படைக்கான வருமான ஊற்றும் கைப்பற்றப்பட்டுள்ள எண்ணைக் குதங்களின் ஊடாகக் கைக்கிட்டியது.

இஸ்லாமிற்காகப் போராடும் தளபதியாக அல்-பஹ்தாதி மக்களால் நோக்கப்படுவதால் பெருகிவரும் ஆதரவு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாட்டினரையும் அவரது ஆதரவாளர்களாக்கியுள்ளது.

ஆனால் இவ்வாதரவு அமெரிக்க மற்றும் ஐரோப்பியரிடையேயும் பரவியுள்ளதே இன்று அந்நாடுகளை அச்சமடைய வைத்துள்ளன.

ஐரோப்பிய மற்றும் அமெரிக்கப் போராளிகளை இரக்கமற்றவர்களாகவும், அச்சமற்றவர்களாகவும், அல்குவேதாவினுடைய அல்-பஹ்தாதியின் படையினர் பயிற்சியளிக்கின்றார்கள்.

" பஹ்தாதியின் இராணுவமாக நீங்கள் இருந்தால், அதன் நோக்கத்தை, அவ்வமைப்பின் மீது நம்பிக்கையை நீங்கள் கொண்டிருந்தால் - பஷ்தாதிகளைப் பார்த்து உலகம் அஞ்ச வேண்டும்..... உலகம் அஞ்சாவிடில் நீங்களும் ஒரு முட்டாளே!... உங்களின் எதிர்காலம் எவ்வாறு அழியப் போகின்றது என்பதைத் தெரியாத முட்டாள்கள்!!!!!"

இவ்வாசங்களே பஹ்தாதிகளின் தாரக மந்திரமாகியுள்ளன......

**உலகம் அஞ்சத்தான் வேண்டுமா ?....**

**– மாயன் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனமயப்படுத்தப்பட்ட இராணுவ மயமாக்கல்:

## பாக்கியசோதி சரவணமுத்து எச்சரிக்கை

நிறுவன மயப்படுத்தப்பட்ட இராணுவ மயமாக்குதல் என்பது வடக்கில் இருந்து முழு நாட்டிற்கும் பரவுவதாக எச்சரித்துள்ள மாற்றுக்கொள்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து கடந்த கால உள்நாட்டு மோதலுக்கான அடிப்படையான காரணங்களுக்கு மீள உயிர்கொடுக்கப்படும், அதேவேளை மோதலொன்றிற்கான புதிய காரணங்களும் உருவாக்கப் படுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

ரேடியோ அவுஸ்திரேலியாவின் சென் லாம் இற்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது....

பொது பல சேனா என்பது, கடும் போக்கு வாதிகளின் சிறிய குழு, பெரும்பான்மையானவர்களின் ஆதரவு அதற்கு இல்லை, ஆனால் இங்கு என்ன முக்கியமானது என்றால், அதற்கு சட்டத்தின் பிடியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசுக்குள் அதற்கு ஆதரவு இருப்பதாலேயே இந்த நிலை என நான் கருதுகிறேன்.

அரசாங்கம் அவர்கள் விடயத்தில் பெருமளவு சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துகிறது, அரசாங்கத்திற்குள் அதற்கு ஆதரவு வழங்கும் சக்திகள் உள்ளன என்று கருதுகிறேன்.

பொதுபல சேனா அரசாங்கத்திற்கு பெரும்பான்மை சமூகத்தினர் மாத்திரமே ஆதரவளிப்பார்கள் என மதிப்பிட்டுள்ளது. தாங்கள் அந்த சமூகத்தின் பாதுகாவலர்கள் அதற்காக குரல் கொடுப்பவர்கள் என தங்களை முன்னிறுத்த வேண்டும் என இந்த சக்திகள் கருதுகின்றன. மேலும் இவை தங்களுடைய சமூகம் விடுதலைப் புலிகளினதும் முஸ்லிங்களினதும் பிடிக்குள் சிக்கி உள்ளதாக எண்ணுகின்றனர். இவர்கள் பல கத்தோலிக்க தேவாலயங்கள் மீதும் தாக்குதல் நடத்தி உள்ளனர். ஆனால் இங்கு விவாதத்திற்குரிய விடயம் என்ன வென்றால் அதிகாரத்தில் உள்ளவர்கள் குடும்பத்தினர் பரம்பரை அவர்களும் தங்களை சிங்கள பௌத்தத்தின் பாதுகாவலர்களாக சித்தரிக்க விரும்புகின்றனர். அவர்களும் தங்களுடைய சமூகம் முற்றுகைக்கு உள்ளாவதாகவும் ஆகவே அந்த சமூகத்தின் பாதுகாவலர்கள் என்ற வகையில் தாங்களே மிகப் பொருத்தமானவர்கள் என காட்ட விரும்புகின்றனர்.

இவ்வருடம் மார்ச் மாதம் இடம்பெற்ற ஜெனீவா அமர்வுக்கு பின்னர் அரசாங்கம் சில தனிநபர்களிடம் விடுதலைப் புலிகளை மீள உருவாக்குவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் உயர் மட்டக் கொலைகளுக்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது. பொதுமக்கள் கைது செய்யப்பட்டார்கள் இறுதியில் அந்த குறிப்பிட்ட நபர்கள் மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

இது இன்னமும் அச்சுறுத்தல் மறையவில்லை என மக்களுக்கு தெரிவிக்கும் முயற்சி ஆகும். 2009 இல் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டாலும் அதன் அச்சுறுத்தல்கள் இன்னமும் இருக்கின்றன. அச்சுறுத்தல்கள் தீவிரம் அடைந்தால் எங்களால் மாத்திரமே உங்களை பாதுகாக்க முடியும் என சொல்லும் நடவடிக்கை ஆகும்.

வடக்கு கிழக்கில் இராணுவ மயப்படுத்தல் என்பது நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு இராணுவம் பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ளது, விவசாயம் செய்கின்றது, ஹோட்டல்களை நடத்துகிறது.

அது அங்கு சிவில் நிர்வாகத்தில் பங்கெடுக்கிறது, சிவில் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கான வெளி குறைவடைந்து விட்டது. மேலும் இங்கு கருத்துச் சுதந்திரம் ஒன்றுகூடும் சுதந்திரம் என்பனவும் மறுக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு மக்கள் தாங்கள் ஒருவகை அடக்கு முறைக்குள் சிக்குண்டவர்கள் போல கருதுகிறார்கள். மேலும் வடக்கு கிழக்கில் பொருளாதார விடயங்களில் பெருமளவிற்கு மத்திய அரசாங்கத்தையே தங்கி இருக்க வேண்டியுள்ளது. அதுவே



திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. அபிவிருத்தி திட்டங்களின் போது மக்களிடம் கலந்து ஆலோசிப்பதில்லை. ஆகவே இந்த விடயத்திலும் தாங்கள் புறக்கணிக்கப் படுவதாக அவர்கள் கருதுகின்றனர்.

இவை எல்லாவற்றிக்கும் அப்பால் அந்த மக்கள் உண்மையை அறிய விரும்புகிறார்கள். யுத்தத்தின் இறுதி நாட்களில் தங்களுடன் இருந்த, சரணடைந்த, கைது செய்யப்பட்ட தங்கள் குடும்பத்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய விரும்புகிறார்கள்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்று 5 வருடங்களுக்கு பின்னரும் இலங்கை யுத்தத்திற்கு பிந்திய நிலையிலேயே உள்ளது. யுத்தம் முடிவடைந்து விட்டது துப்பாக்கிகள் மௌனமாகி விட்டன. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டது எனினும் நாங்கள் முரண்பாட்டுக்கு பிந்திய நிலையில் என்ற அளவிற்கு இன்னமும் வரவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால் மோதல்களுக்கு காரணமான அடிப்படை விடயங்களுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. அதைவிட முக்கியமானது இந்த காரணங்கள் மீண்டும் ஊக்குவிக்கப் படுகின்றன புதிய காரணங்கள் உருவாக்கப்படுகின்றன.

சட்டத்தின் ஆட்சி சீர்குலைக்கப்பட்டு விட்டது. அதைவிட மிக பயங்கரமான மத சகிப்புத் தன்மையின்மை என்பதை நாம் காண்கிறோம். அது வெளிப்படையான வன்முறைத் தன்மையுடன் தன்னை வெளிக்காட்டி வருகிறது.

நன்றி - குளோபல் தமிழ் நியூஸ்
www.globaltamilnews.net

---

# தமிழ் தேசியத்துக்கு தமிழ் சமுதாயத்தின் பங்கு

நன்றி - நிர்மானுசன் பாலசுந்தரம்
குளோபல் தமிழ் நியூஸ்

நேரடியான இன அழிப்பு போரின் உச்சக் கட்டம் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்று ஐந்து வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும், தமிழர் தேசம் மீண்டெழும் என்ற நம்பிக்கை, தோல்வி மனப்பான்மையால் பாதிக்கப்பட்டவர்களிடம் துளிர்ப்பதனை இதுவரை பரவலாக காணமுடியவில்லை.

புற முரண்பாடுகளுக்கு (External contradiction) நிகராக அக முரண்பாடுகளும் (Internal contradiction) தீவிரம் அடைந்துள்ளமை இதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும். இன அழிப்புக்கு எதிர்பாரத முறையில் முகம் கொடுத்த தேசம் என்ற அடிப்படையில், அதிர்ச்சியினால் உண்டான கூட்டு உளவியல் பாதிப்பு பல்வேறு தளங்களில் சீரற்ற தன்மையை உருவாக்கியது. அது அக முரண்பாடுகளுக்கு வழிவகுத்தது.

இந்த நிலை, இலக்கினை நோக்கிய ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையை சீர்குலைத்தது. இதன் விளைவாக பல்வேறு அமைப்புகள் தோற்றம் பெற்றன. இனி ஒன்றும் சரிவராது என்ற எண்ணத்தில், ஒரு பகுதியினர் போரட்டத்திலிருந்து விலகி இருக்க முடிவெடுத்தார்கள். பிறிதொரு பிரிவினர், இன அழிப்பு அரசாங்கத்துக்கு துணைபோகத் தொடங்கினர். இதேவேளை, பல்வேறு அமைப்புகள் உருவாக்கம் அடைந்தாலும், சில அமைப்புகளின் செயற்பாடுகளுக்கிடையில் வேற்றுமையில் ஒற்றுமை நிலை (Unity in Diversity) நிலவுவதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும், இந்த நிலை, இலக்கினை அடைவதற்கான பயணத்தை பலப்படுத்துவற்கு பயணிக்க வேண்டிய தூரம் இன்னும் அதிகம். இவற்றையெல்லாம் அவதானித்த படி, இலட்சியத்தில் பற்றுறுதி கொண்டவர்கள் போராட்டத்தை தொடர்கிறார்கள்.

இது சிறீலங்கா இனஅழிப்பு அரசாங்கம் எதிர்பாராத மாற்றுநிலை (Transformation). அதேவேளை, சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பை எதிர்த்தபடி முன்னகர்ந்த தமிழரின் இறைமை மீட்புக்கும் சுதந்திரத்திற்குமான போராட்டத்தோடு நேரடியாக 2009 மே வரை தொடர்பற்றிருந்தவர்கள், முள்ளிவாய்க்கால் பேரவலம் உருவாக்கிய விளைவாலும், தமிழர் தேசத்தின் இருப்பும் கௌரவமும் கேள்விக்குறியாகியதாலும், தம்மை போராட்டத்தோடு இணைக்க முன்வந்தார்கள். இத்தகையவர்கள் போராட்டத்திற்கான பங்களிப்பை காலம் தாழ்த்தி வழங்கத் தொடங்கியிருக்கலாம். ஆனால், இத்தகையவர்களின் பங்களிப்பென்பது முக்கியமானது. இத்தகையவர்களை உரியவகையில் இனங்கண்டு, அவர்கள் போராட்டத்திற்கு வழங்கக்கூடிய பங்களிப்புக்களை அதிகரிக்க செய்யவேண்டிய பொறுப்பு போராட்டத்தோடு நீண்டகாலம் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உள்ளது.

அதேவேளை, புலம்பெயர் தேசங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் தாயகத்தில் வாழும் மக்களின் மனித உரிமைகளுக்காக, மனிதாபிமான உதவிகளுக்காக தம்மை போராட்டத்தோடு இணைத்துக் கொண்டார்கள். மேற்குலகில் நிலவும் ஆட்சிமுறை இவர்களின் சனநாயகப் போராட்டத்திற்கு துணையாக இருந்து வருகிறது.

அதேவேளை, பல இளைய புதிய முகங்கள் போரட்ட களத்தில் தம்மை இணைத்துள்ளார்கள். இத்தகையவர்களுக்கு உற்சாகத்தை வழங்கி உள்வாங்குவதற்கான பொறுப்பு தமிழ்த் தேசிய சக்திகளுக்கு உள்ளது.

மே 2009 பின்னரான புதிய முகங்களின் வரவென்பது புது தென்பை உணர்வாளர்களுக்கு வழங்கியுள்ளமை கவனத்திற்கொள்ளத்தக்கது. இது புலம்பெயர் தளத்தில் பரவலாக இடம்பெற்றாலும், தாயகத்தில் தொடரும் அச்சுறுத்தல்களால் உணர்வும் ஆளுமையும் இருப்பினும், இளையோர் முன்னுக்கு வருவதற்கு தயக்கம் காணப்படுகிறது. இது எதிர்பார்க்கப்படக் கூடியதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமாகும்.

அதேபோன்று தமிழ் நாட்டிலிருந்து பல இளைய முகங்கள் ஈழத்தமிழருக்கு ஆதரவாக பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர். இத்தகையவர்களுக்கு, குறிப்பாக புலம்பெயர் தளத்தில் ஆதரவுத்தளம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மதிநுட்பமும், வினைத்திறனும், ஆளுமையும் உடைய இளைய தலைமுறை தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர் தளம் என இலக்கினை அடிப்படையாகக் கொண்டு இணையும் போது போராட்ட தேர் உத்வேகத்தோடு நகர்த்தப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம்.

மேற்கூறப்பட்டது போன்ற உள்வருகைகள் மே 2009ற்குப் பின்னரான எமது இன்றைய அறவழிப் போராட்டத்திறகு சாதகமானவை. ஆயினும், தமிழ் சமூகம் கணிசமான அளவு பாதகமான விடயங்கள் தொடர்பாகவே கவனம் செலுத்தும் துன்பகரமாக சூழல் காணப்படுகிறது. இது எம்மிடம் உள்ள வளங்களை வீணடித்துவிடும். தற்போது எமக்குள்ள வளங்களும், சந்தர்ப்பங்களும் மே 2009 ற்கு முன்னர் இருக்கவில்லை. ஏனெனில், அவை முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புகளால் கிடைக்கபெற்றவை.

ஆதலால், எங்களிடம் எத்தகைய வளங்கள் உண்டு என்பதை விட, உள்ள வளங்களை எவ்வாறு பயன்படுத்தப் போகிறோம் என்பது முக்கியம். உதாரணமாக, சிறீலங்கா அரசு, தமிழர் தேசத்தின் மீது 1983 யூலையில் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையின் பின்னர், தமிழர் உரிமைப் போராட்டத்தை மையப்படுத்தி பல்வேறு அமைப்புகள் ஆயுதமேந்தின. படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் அவர்களின் ஆய்வின் படி, ஆயுதமேந்திய அமைப்புகளில் அங்கம் வகித்தோரின் ஒன்றிணைந்த எண்ணிக்கை சுமார் 40 ஆயிரம். அந்த காலப்பகுதியில், சிறீலங்கா இராணுவத்தின் நிரந்தரப் படைகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரம். ஆயினும், தமிழர் தரப்புகள் போரில் மேலாதிக்கத்தை செலுத்தவில்லையென்பது மட்டுமல்ல, மாறாக அவர்களால் இராணுவ வலுச் சமநிலையை எக்கால கட்டத்திலும் உருவாக்க முடியவில்லை என்பதுவும் கவனிக்கத்தக்கது.

ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜயசிக்குறு முறியடிப்புச் சமர், ஓயாத அலைகளின் தொடர் வெற்றி, கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மற்றும் கொழும்பு துறைமுகம் மீதான தாக்குதல் மற்றும் தீச்சுவாலை முறியடிப்புச் சமர் போன்றவை, இலங்கைத் தீவின் போரியல் வரலாற்றில் முதன் முறையாக இராணுவ வலுச் சமநிலையை உருவாக்கியது. இந்த இராணுவ வலுச் சமநிலையென்பது, இரு தரப்பினரதும் ஆளணியை அடிப்படையாகக் கொண்ட சமபலத்துடன் உருவாக்கப்பட்டதல்ல. ஏனெனில், இராணுவ வலுச்சமநிலையை உருவாக்கிய போது விடுதலைப் புலிகள் சிறீலங்கா ஆயுதப் படைகளுடன் ஒப்பிடும் போது, ஆட்பலத்திலும், ஆயுத பலத்திலும் பன்மடங்கு பின்தங்கியிருந்ததோடு, சிறீலங்கா உட்பட 32 நாடுகளில் தடைசெய்யப்பட்டிருந்தார்கள்.

அந்த இராணுவ வலுச் சமநிலை சர்வதேச மயப்பட்ட “சமாதான உடன்படிக்கைக்கு“ வித்திட்டதும் இத் தருணத்தில் நினைவிற்கொள்ளத் தக்கது.

ஆனால், இன்றைய களமுனையில் அறிவும் மதிநுட்பமும் தான் ஆயுதம். இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியும், இழந்து போன இறையாண்மையை மீட்பதற்கும், மறுக்கப்பட்டு வரும் உரிமைகளை பெறுவதற்குமாக உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் திறக்கப்பட்டுள்ள களத்தில் திறவுகோலாக அறிவும் மதிநுட்பமும் திகழும். இதனூடாக எமக்கெதிரான சவால்களை எமக்கான சந்தர்ப்பமாக மாற்றியமைப்பதற்கும், எமக்கெதிரான தடைகளை தகர்ப்பதற்கும் இன்றைய காலத்தின் எமது ஆயுதமாக அறிவும் மதிநுட்பமும் உள்ளது.

THE EVOLUTION
OF
AN
ETHNIC
IDENTITY

மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமே இறுதியில் வெற்றியடையும் என்பதற்கமைய, தத்துவவியலாளர்கள், வரலாற்றியலாளர்கள், உளவியலாளர்கள், சட்டத்தரணிகள், சமூகவியலாளர்கள், பொருளியலாளர்கள், பொறியியலாளர்கள், அரச அறிவிய லாளர்கள், சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற பரந்துபட்ட சமூக கட்டமைப்பையும் தன்னகத்தே கொண்டு முன்னெடுக்க வேண்டும் இந்த புதிய போராட்ட களம்.

மே 2009 க்கு முன்னர் போராட்டத்தோடு, நேரடியாக தொடர்புபாடாதவர்கள் மத்தியில் கூட, தமிழர் தேசத்துக்கு எதிராக தொடரும் அநீதி தாக்கத்தை செலுத்தியிருந்தால், அவர்களை போரட்டத்தில் பங்கெடுப்பவர்களாக சூழலும் காலமும் மாற்றியிருக்கும். அத்தகையவர்களின் நோக்கம், இதயசுத்தி, அர்ப்பணிக்க தயாரன மனோநிலை மற்றும் ஆளுமை போன்றவற்றால் போராட்டத்தில் ஏற்படக்கூடிய சாதகமான திருப்புமுனைகளை கவனத்திற்கொண்டு, போரட்டத்தை முன்னெடுப்பதற்குரிய இடத்தையும் சூழலையும் அத்தகையவர்களுக்கு வழங்க வேண்டும். இவை சரியான முறையில் நகர்ந்தால், வளர்ச்சியும் சாதகங்களும் எமக்கானதே.

கடந்த காலம் மீதான விமர்சனத்தையும் விட முக்கியமானது எதிர்காலத்திற்காக நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரோக்கியமான முதலீடுகள். ஆதலால், தமிழ் சமூகம் தமிழ்த் தேசியத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற திடசங்கற்பம் பூண்டுள்ள தனிநபர்கள் மீதான தாக்குதல்களை தவிர்த்து, அவர்களிடம் உள்ள ஆளுமைக்கு அங்கீகாரம் அளித்து, அவர்களுடைய செயற்பாடுகள் ஆக்கபூர்வமாக அமைய துணைநிற்பது தேசத்தின் தேவையும் காலத்தின் வேண்டுதலும் ஆகும். இதனை சரிவர உணர்ந்து செயற்பட்டால், அழிக்கப்பட்ட தேசம் மீண்டெழுவதற்கு நாம் தடையாக இருந்தவர்கள் அல்ல துணையாக நின்றவர்கள் என்று வரலாறு எழுதும். வரலாற்றை எழுதுபவர்களாகிய நாம் எத்தகைய வரலாற்றை எழுதப் போகிறோம் என்பது முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையில் தவிர்க்க முடியாத கேள்வியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் தான் பதிலுரைக்க வேண்டும்??

...நாட்டு நடப்பு...

பாலியல் ரீதியான குற்றச் செயல்கள் எமது நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மேலும் அவை நேரடியான தற்கொலைகள், படுகொலைகள் என்பவற்றில் போய் முற்றுப்பெறுகின்றன. அவ்விதமான வன்புணர்வுகள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் குறித்த குற்றவாளிக்கு நீதிமன்றம் மூலம் தண்டனையை பெற்றுக்கொடுத்ததுடன் தமது கடமைகள் பூர்த்தியாகிவிட்டன என நினைப்பது மிக தவறாகும்.

அவ்விதமான குற்றச் செயல்கள் இடம் பெறாது பார்த்துக்கொள்ளல் அல்லது ஓரளவு தடுத்தல் போன்றவற்றை விட்டு இந்த நாட்டிலிருந்து அவற்றை முற்றாக இல்லாதொழிப்பதற்கான கடும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிக முக்கியமானதாகும். ஆண் கெட்டால் அது ஒரு சம்பவம், ஆனால் ஒரு பெண் கெட்டால் அது ஒரு சரித்திரம். அது மாத்திரமல்ல கெட்டுப் போன பெண்ணால் சமூகத்தில் மேற்கொண்டு நடமாடவும் முடியாது. மேலும்



நடமாடவும் விடமாட்டார்கள் சில காம அரக்கர்கள்.

கடந்த வாரம் நல்லதண்ணீர் பிரதேசத்தில் நான்கு வயது சிறுமி பதினான்கு வயது சிறுவனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு நாவலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். குற்றம் புரிந்த சிறுவனுக்கு எதிராக அப்பகுதி காவல்துறையினர் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால் அக்கலங்கத்தை அகற்ற முடியுமா?

இந்திய மண்ணின் சுதந்திரத்தைப் பற்றி பலர் அன்று பலவிதமான கருத்துக்களை முன் வைத்த போது அண்ணல் காந்தி தனது கருத்தை இவ்வாறு அன்று முன்வைத்தார். 'ஒரு பெண் நடுநிசி நேரத்தில் தனியாக எங்கும் சென்றுவரக்கூடிய ஒரு பீதியற்ற நிலை என்று இந்தியாவில் தோன்றுகின்றதோ அன்று தான் இந்தியா ஒரு பூரண சுதந்திரம் கொண்ட நாடென கணிக்கலாம்'.

எமது நாட்டை விட பன்மடங்கு அதிக சனத்தொகையை கொண்ட அயல் நாடான இந்தியாவில் பாரியளவிலான பாலியல் குற்றச் செயல்கள் இடம்பெறுவதை அச்சு ஊடகங்கள் மூலமும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் நாம் அறிந்துகொண்டே இருக்கின்றோம்.

ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் பாலியல் நடவடிக்கைகள் சர்வசாதாரணமே. காரணம் அவர்களது கலாச்சாரத்திற்கு அவை ஒத்துப்போகும். அவர்கள் வீதியில் வைத்து வெட்கம், கூச்சமின்றி ஒரு ஆண், ஒரு பெண்ணுக்கு முத்தமிடுவான். வயதெல்லை அங்கு கணிக்கப்பட மாட்டாது. காதலர்கள் பொது இடங்களில் உடலுறவில் ஈடுபடுவார்கள். அவ்வாறே பல பாலியல் சேட்டைகள் அங்கு இடம்பெறுவது சாதாரண நிகழ்வுகளே.

ஆனால் அவை எமது நாட்டு கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றுக்கு ஒரு துளி கூட ஒத்துவராது! நாமே நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் பார்ட்டிகளில் கலந்து கொள்ள வெளியில் புறப்பட்டுச் செல்லும் போது பெற்றோரே உரிய கருத்தடை மாத்திரைகளை பிள்ளைகளின் கைகளில் கொடுத்து வழியனுப்புவார்கள்.

மத்திய தரை நாடுகளிலுள்ள செல்வந்த குடும்பப் பெண்கள் எங்கே தமது கணவன்மார் பாலியல் இச்சைக்காக சொத்துக்களை வேறு பெண்களுக்கு தாரை வார்த்து விடுவார்களோ என்ற பீதியில் கணவன்மார்களின் இச்சைக்கு தமது வீட்டு பணிப்பெண்களையே ஏற்பாடு செய்து கொடுப்பார்கள். அந்த ஏற்பாடுகளில் எமது நாட்டிலிருந்து அங்கு பணிப்பெண்களாக சென்றவர்களும் அகப்பட்டுள்ளார்கள் என்பதனை இங்கு விசேடமாக சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

மகாத்மா காந்தி ஒரு தூர நோக்குடன் பாலியலில் உள்ள அனர்த்தத்தை பற்றி அன்று நாட்டின் சுதந்திரத்தை முன் வைத்து கருத்துக் கூறியும் அங்கு தனியாக பேருந்தில் சென்ற கல்லூரி மாணவியை ஓணாய்க் குணம் படைத்த பல காமுகர்கள் வேட்டையாடிய சம்பவம் முழு இந்தியாவையும் சில மாதங்களுக்கு முன் அதிரவைத்தது.

பிரசவத்திற்காக நீர்கொழும்பு மருத்துவமனைக்கு ஒரு இளம் யுவதி சென்றிருந்தாள். மருத்துவர் அவரிடம் வயதைக் கேட்ட போது அவள் பொய்யான வயதை தெரிவித்திருந்தாள். ஆனால் மருத்துவர் அவளின் உண்மையான வயதை கண்டுபிடித்திருந்தார்.

அதாவது அவளின் உண்மையான வயது 15. அவளின் காதலனின் வயது 20. இரண்டுமே திருமணச் சட்டத்திற்கு முரணான வயதுகள். தற்பொழுது காதலனை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். அதுமாத்திரமல்ல சுமார் ஒரு வருட காலம் அவர்கள் யாருக்கும் தெரியாமல் கணவன், மனைவியாக வாழ்ந்தும் உள்ளனர்.

பாலியல் ரீதியான அனர்த்தங்கள் சாதாரண மக்களுக்கு மாத்திரமல்ல உலகில் பெரும் பதவிகளை வகிப்பவர்களையும் விட்டு வைப்பதில்லை. 2009ம் ஆண்டு தென்ஆபிரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டவருக்கு ஏழு மனைவிமார் உள்ளனர். அவர்களில் ஒருவர் கடந்த மாதம் இனம் தெரியாதோரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் அந்த நாட்டின் பத்திரிகைகளில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நமது நாட்டில் கூட பல அரசியல்வாதிகளின் பாலியல் சேட்டைகளை நாம் அறியாமலில்லை. சில சம்பவங்கள் வெளிக்கொணரப்பட்டாலும் எண்ணிலடங்காதவைகள் பல வெளிவராமல் உள்ளன. இன்னும் பல மூடி மறைக்கப் பட்டுள்ளன. நம் நாட்டுக்கு விடுமுறையை கழிக்க வந்த வெளிநாட்டு பெண்ணொருத்தியை பலாத்காரத்திற்கு உட்படுத்தி அவளை படுகொலை செய்த சம்பவம் தற்பொழுது நீதிமன்றத்தின் முன் விசாரணையில் உள்ளது.

பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆண், பெண் என்ற பால் வித்தியாசமோ வயதெல்லையோ கிடையாது. அண்மையில் வயது முதிர்ந்த மாது ஒருவர் கூட இளைஞன் ஒருவனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் பல ஊடகங்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. சுமார் 13 வருடங்கள் குற்றச் செயல்களுக்காக சிறை சென்றிருந்தவர் விடுதலை பெற்று வீடு வந்த போது அடுத்த நாளே தனது சொந்த மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். அவ்வாறான தரங்கெட்ட, முறைகேடான பல சம்பவங்கள் நம் நாட்டில் பரவலாக இடம்பெற்றுள்ளன. உலகமெங்கும் இச் செயல் வியாபித்திருப்பதனால் தான் இன்று முழு உலகமும் 'எய்ட்ஸ்' போன்ற நோய்களை கண்டு அச்சமடைந்துள்ளது.

அவளின் திருமணம் பெற்றோரால் நிச்சயிக்கப் பட்டதல்ல. அது விருப்பத்தின் பேரிலே இடம்பெற்ற திருமணமாகும். மூன்று குழந்தைகளை பெற்றெடுத்த பின் அவள் தாம்பத்திய உறவிலிருந்து சற்று விலகி இருந்தாள். அதனால் குடும்பத்தில் நிதமும் பிரச்சினைகள் குவிந்தன. கணவன் மூர்க்கத்தனமாக செயல்பட ஆரம்பித்தான். அவனது போக்கு முற்றிலும் மாறியது. மது போதைக்கு மட்டுமின்றி போதை வஸ்த்துக்களுக்கும் அடிமையானான். ஏற்கனவே அவன் செய்து கொண்டிருந்த தொழிலை கைவிட்டு அப்பகுதியிலுள்ள தாதாக்களுடன் சேர்ந்து போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டதால் பல தடவைகள் சிறைக் கூடத்தின் கம்பிகளை எண்ண நேர்ந்தது.

சிலரிடம் பல வித கெட்ட குணங்கள் இருக்கும். ஒரு சிலரிடம் ஒரே ஒரு கெட்ட குணம் மாத்திரம் இருக்கும். அவன் மது, போதைவஸ்து ஆகியவற்றுக்கு மாத்திரம் அடிமையாக இருக்கவில்லை. பாலியல் விடயங்களிலும் மிக மோசமாக ஈடுபட்டான். அவனது மனைவி தாம்பத்திய உறவில் அவனை முற்றாக ஒதுக்கி வைத்திருந்தமையை அவனால் பொறுக்க முடியாமல் இருந்தது.

அந்த மன வேதனையை அவன் யாரிடம் போய் சொல்வது? சில பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியாதல்லவா? அதனால் அவன் தனது மனைவி மேல் கடும் கோபம் கொண்டிருந்தான். அவன் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்டு மருத்துவமனையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தாள் அந்த வீட்டுப் பணிப்பெண்.

தனது மனைவியை கொலை செய்வதற்காக அங்குள்ள உணவுப்பொருளில் அவன் விஷம் கலந்தமை தெரியாது அப்பணிப்பெண் அதனை உண்டதாலேயே அவள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.



காவல் துறையினரின் விசாரணையின் போது மனைவி கூறியவைகள் அனைத்தும் முழுப்பிரச்சினைகளுக்கும் காரணமென கண்டு பிடிக்கப்பட்டது. அவனது தீய பாலியல் நடத்தையின் காரணமாகவே அவன் எய்ட்ஸ் நோயாளனானான். தாம்பத்திய உறவில் இருந்து அவனை முற்றாக அவள் ஒதுக்கி வைத்தமைக்கு அதுவே முக்கிய காரணமாகும்.

- பாலையூற்றான் -

---

## அதிசய இராட்சத பலூன்

இங்கிலாந்தில் உள்ள Northampton என்ற நகரில் ராட்சத பலூனில் பயணம் செய்த Matt Rate என்பவர் உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது திடீரென காற்று சுத்தமாக நின்றுவிட்டதால் அவரால் பலூனை அவர் நினைத்தபடி இயக்க முடியவில்லை. எனவே ராட்சத பலூனை உடனடியாக தரையிறக்க முடிவு செய்தார்.

முதலில் அவர் அவருக்கு கீழே இருந்த கார் பார்க்கிங் பகுதியில் இறக்க முடிவு செய்தார். ஆனால் கார் பார்க்கிங் அருகில் மிகப்பெரிய மரம் இருந்ததால் அதில் பலூன் சிக்கிக்கொள்ள வாய்ப்பு இருந்ததால், வேறு வழியின்றி சாலையில் இறக்க முடிவு செய்தார்.



## ஃபேஸ்புக்கினால் மாட்டிய திருடன்



அமெரிக்காவில் உள்ள Dakota County நகரில் 26 வயது நிகோலஸ் என்பவன் ஜேமஸ்வுட் என்பவரின் வீட்டில் ஜேம்ஸ்வுட் வைத்திருந்த பணம், கிரெடிட் கார்டு, விலையுயர்ந்த துணிகள் போன்றவற்றை திருடிய பின்னர் அந்த வீட்டை விட்டு கிளம்பும் முன், கம்ப்யூட்டரை பார்த்துள்ளான். உடனே அவனுக்கு தனது ஃபேஸ்புக்கை ஓபன் செய்ய வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது.

திருடிய பொருட்களை ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு தனது ஃபேஸ்புக் பக்கத்தை ஓபன் செய்து அரைமணி நேரம் ஸ்டேட்டஸ் போட்டுவிட்டு பின்னர் தான் திருடிய பொருட்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டான். ஆனால் அவன் செல்வதற்கு முன்னர் அவன் ... ஃபேஸ்புக் லாக் அவுட் ... கொண்டான்.

## உணவு தேடிய பசு



பசுவொன்று உணவு தேடிச் சென்று வீடொன்றின் கூரையில் சிக்கிக் கொண்ட சம்பவம் சுவிட்ஸர்லாந்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. பின் அங்கெதுவும் கிடைக்காததினால் இரண்டு மூன்று ஓடுகளைத் தட்டி விட்டு மெதுவாக இறங்கி கீழே வந்துள்ளது.

## சிறுவனின் அட்டகாசம்



சீனாவில் வாழும் இரண்டு வயது சிறுவன் Cheng Cheng பத்து மாத குழந்தையாக இருக்கும்போது அவனுடைய தந்தை குடித்துவிட்டு மீதம் வைத்திருந்த பீரை குடித்ததாகவும், அதுமுதல் தினமும் பால் குடிக்காமல் பீர் பாட்டிலை கேட்டு அடம்பிடிப்பதாகவும், நாள் ஒன்றுக்கு இரண்டு பீர் பாட்டிலை இந்த சிறுவன் குடிப்பதாக அதிர்ச்சியுடன் அவனுடைய பெற்றோர் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் பயணம்!!

சிறுகதை

அனு....அனு....அனு....."

"எதுக்காக இப்படி ஒரேயடியா கத்துறீங்க........"

"ஆபிஸீக்கு நேரமாச்சுன்னு உனக்குத் தெரிய வேண்டாமா?"

"அமைதியா இருந்த வீடு ஒரு வார காலமா அமளிப்



பட்டுக்கிடக்குது"

"என்ன சொல்றே"

"பின்னே என்னங்க! காலையிலே எழுந்திருச்சு காய்கறி வாங்கிக் கொடுப்பீங்க! நான் சமைச்சுக் கொடுப்பேன்! உங்கப்பா வந்ததிலிருந்து கடைக்குப் போறதை விட்டுட்டீங்க"

"அப்பா! நீங்கதான் காலையிலே கடைக்குப் போய் காய்கறி வாங்கிக் கொடுத்தா என்ன? வாக்கிங் போனாப்பலே இருக்கும்! ஏம்மா நீ தான் கொஞ்சம் சமையலுக்கு உதவி பண்ணினா என்ன? உனக்கிருக்கும் பிரஷர் கொஞ்சம் சரியான மாதிரியும் இருக்கும்."

மகன் பிரகாஷ் பேச்சைக் கேட்டவுடன் சச்சிதானந்தமும், தேவகியும் ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டனர்.

இருவரும் இங்கே இருப்பது தங்களின் பிள்ளைக்கு பிடிக்கவில்லையென்பது அப்பட்டமாகத் தெரிந்தது.

ஒருவாரம் கூட தாக்குப் பிடிக்கவில்லை. அன்று மதியமே வீட்டைவிட்டு வெளியேறி விடுவது என்று தீர்மானித்தனர். வந்த சுவடு தெரியாமல் மூத்த மகனிடம் சொல்லாமல் கொள்ளாமல் இரண்டாவது மகன் செல்வம் வீட்டுக்கு வந்தனர்.

தாய் தந்தையரை செல்வம் எதிர்பார்க்கவில்லை.

"வாங்கப்பா!....வாங்கம்மா! அண்ணன் வீட்டுக்கு ரெண்டு பேரும் போயிருப்பதாக தங்கச்சி மீனாவின் மாப்பிள்ளை கூறினார்! ஏம்ப்பா! அண்ணன் வீடு வசதியில்லையா? ஏம்மா? அண்ணி நல்லா கவனிச்சுக்கிறலையா? அண்ணன் கைநிறைய சம்பளம் வாங்குது? சொந்தவீடு பால்மாடு சொந்தமா வச்சிருக்கு! இவ்வளவு வசதி இருக்கிறப்போ கூடப் பத்து நாளைக்கு இருந்துட்டுப் போகச் சொல்லலையா......?"

"இல்லப்பா .....நாங்களும் பெரிய மகனைப் பார்த்தாச்சு! சின்ன மகனைப் பார்க்க வேண்டாமா?"

"அதுக்குச் சொல்லலை! உங்களுக்கு வசதி குறைச்சலா இருக்குமோன்னு சொன்னேன்! முப்பது வருஷமா வசதியா வாழ்ந்த உங்களுக்கு இந்த சிறிய வீட்டில் வசதி குறைச்சலா இருக்குமோன்னுதான்....."

"பரவாயில்லை. எல்லோரும் பிறக்கறப்பவே வசதியோடு பிறக்கறதில்லை! ஏழ்மையைப்பற்றி நானும் என் வயசுக்கு தெரிஞ்சுதான் வச்சிருக்கேன்"

"அம்மாவுக்கு லோ பிரஷ்ஷராய் இருக்கிறதுனாலே அடிக்கடி மயக்கமாய் வருதுனு ஏற்கனவே சொல்லுவாங்க. இங்கு ஹால்லே மட்டும்தான் ஃபேன் இருக்கு.....குழந்தைகள் ஃபேன் இல்லாமல் தூங்க மாட்டாங்க."

"அதனாலென்ன வெளியில் படுத்துக் கொள்கிறோம். குழந்தைகளின் தூக்கம் கெடக் கூடாது. உன்னையும் அப்படித் தானே வளர்த்தோம்."

"அப்பா! தப்பா எடுத்துக் கிடாதீங்க. வீட்டில் உள்ள நிலையை உங்களிடம் வெளிப்படையாக சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது."

சச்சிதானந்தமும் தேவகியும் மறுநாளே மகள் வீட்டிற்கு புறப்பட்டார்கள்.

"வாங்கப்பா! வாங்கம்மா!" - ஒரே மகள் புவனா வரவேற்றாள்.

"சின்ன அண்ணன் வீட்டிற்கு போயிருப்பதாக பெரியண்ணன் ஃபோனில் சொல்லிச்சு! இவ்வளவு சீக்கிரம் இங்கு வருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை! மாமனார், மாமியார் இருவரும் ஒருவாரம் தங்கிவிட்டு நேற்றுத்தான் ஊருக்குப் போனார்கள் அவர்கள் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை."

புவனாவின் கணவன் சம்பிரதாயத்துக்கு, வாங்க என்றான்! அவனது வரவேற்பில் உற்சாகமில்லாதது கண்ட சச்சிதானந்தமும் தேவகியும் மனங்கூசினார்கள். கணவனது போக்கைப் புவனா புரிந்து கொண்டாள்.



"நானும், அவரும் நாளை வெளியூர் போவதாக இருக்கோம்" - என்றாள்.

வயோதிகப் பறவைகள் மெதுவாகப் பறந்து கூடு திரும்பின.

சச்சிதானந்தமும், தேவகியும் பிள்ளைகளின் உபசரிப்புகளைப் பற்றி அலசலானார்கள். சச்சிதானந்தத்துக்கு கடந்த கால நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக இதயத்தில் படமாக ஓட ஆரம்பித்தது.

சச்சிதானந்தம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்று ஐந்து மாதங்கள் உருண்டோடி விட்டன.

மூன்றாவது மாதத்திலேயே எல்லாப் பணமும் வந்து விட்டது. இரண்டு லட்சங்கள் கைவசம் உள்ளதைத் தெரிந்து இரண்டு மகன்களும், மகளும் பணம் பங்கீடு செய்து கொள்ள வீடு தேடி வந்துவிட்டார்கள்.

சச்சிதானந்தம் பங்கீட்டைக் காலம் கடத்த முடியாத நிர்பந்தத்திற்கு ஆளானார். பிள்ளைகளின் திருமணக்கடன்களுக்காக அடமானமிருந்த வீட்டைத் திருப்பினார். பிள்ளைகளுக்கு தலா இருபத்திஐயாயிரம் கொடுப்பதைத் தவிர அவர் தப்பிக்க வழியில்லாமல் திக்குமுக்காடினார்.

கையிலே பத்தாயிரம் மட்டுமே மிஞ்சியது ஐந்து மாதங்களில் அதுவும் கரைந்தது.

"தேவகி நான் அப்பவே சொன்னேன்! நீயும் பிள்ளைகளோடு சேர்ந்துக்கிட்டு நமக்கு பிள்ளைகள் இருக்கும்போது அவ்வளவு பணம் எதற்கு என்று சொன்னீயே! இப்ப தெரிஞ்சுக்கிட்டியா?"

"பெண் புத்தி பின் புத்தி என்று சொல்லக்கேட்டிருக்கேன்! அனுபவிச்சப்புறம்தான் தெரியுது"

"மூத்தவன் பேசிய பேச்சின் பொருள் விளங்கியதா உனக்கு...."

"நன்றாகவே விளங்கியது! அவனை எவ்வளவு செல்லமாக வளர்த்தேன்!" - கண்கள் கலங்கின.

"இரண்டாவது மகன் அப்பாவின் செல்லப்பிள்ளையென்று மூத்தவன் அடிக்கடி சொல்லுவானே, அவன் பேச்சைக் கேட்டாயா?"

"கேட்டேன்! வெளியில் போய் படுத்துக்கொள்ளச் சொன்னான்! என்னைப் பற்றிக்கூட கவலையில்லை. உங்களைப் போய் வெளியில் படுத்துக்கொள்ள....." அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை! கண்ணீர் பொல பொலவென்று கொட்டியது.

"அடி பைத்தியமே! நீ ஏன் அழுகிறாய். நான் உயிரோடிருக்கும் வரை உன்னைக் கண்கலங்க விடமாட்டேன்"

"ஒரே மகள்! நல்ல இடத்தில் சம்பந்தம் செய்து கொடுப்பதற்காக உன் நகைகளை விற்று, கல்யாணத்தை முடிச்சோமே, அந்த மகள் பாசத்தைப் பார்த்தியா"

"அவ பேர்ல ஒன்னும் தப்பில்லீங்க! அவளுடைய கணவர் மனசு அப்படி. அவரை அவளால் எதிர்த்துப் பேச முடியலே!"

"பணத்தைப் பங்குபோட்டு வாங்கினப்ப மட்டும் மனசு சரியாய் இருந்துச்சாக்கும்? தேவகி, நான் உயிரோடிருக்கும் போதே இந்த நிலையின்னா, என் உயிருக்கு ஏதாவது வந்துச்சுனா, உன்னை யார் கவனிச்சுக்கிறப் போறாங்க! அதுதான் என் கவலை!

"அப்படிச் சொல்லாதீங்க! எல்லாத்தையும் பார்த்த பிறகும் நான் உயிரோடிருக்கேனே...."

தேவகிக்கு துக்கம் தாழமுடியாமல் தேம்பி, தேம்பி அழுதாள்! புடவையின் முந்தி ஈரமாகியது.

சச்சிதானந்தம் தேவகியை ஆசுவாசப் படுத்தினார்! அவருக்கு ஆறுதல் சொல்ல மக்கள் யாரும் வரவில்லை.

தினமும் செய்தித் தாள் படிப்பது சச்சிதானந்தத்தின் பொழுதுபோக்காகும். பத்திரிகையை நிறுத்தச் சொல்லிவிட்டார்! மாதந்தோறும் முன்னூறு ரூபாய்க்கு வாங்கும் மாத்திரைகளை நிறுத்த எண்ணினார்! தூய வெண்ணிற ஆடைதான் அணிவார்! இனி தனது ஆடைகளை தானே சலவை செய்து கொள்ள திட்டமிட்டார்! மாலை டிபனை வேண்டாம் என்று மனைவியிடம் கூறினார்.

தம்பதியர் இருவரும் சித்தம் கலங்கி அமர்ந்திருந்தனர்!

"சார் போஸ்ட்" - தபால்காரர் நீண்ட கவர் ஒன்றை தந்துவிட்டுச் சென்றார்.

ஆவலுடன் பிரித்துப் படித்தார்!.... விழிகள் ஆகாசமாய் விரிந்தன.

"தேவகி! பிள்ளைகள் கைவிட்டாலும் நமக்கு ஒரு நல்ல காலம் வந்திருக்கு. என்னுடைய உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டா, உன்னுடைய பாதுகாப்புக்கு இன்சூரன்ஸ் செய்திருந்தேன். உனக்குக்கூட நான் சொல்லலை. பாலிசி முடிந்து இப்படி திடீரென்று ரெண்டு லட்சம் வரும்னு நானே எதிர்பார்க்கல்லே!"

"அப்படியா.....? ஆண்டவன் காப்பாத்தினாரு"! - புடவையின் தலைப்பால் கண்களை துடைத்துக் கொண்டாள்.

"இனிமேலாவது நாம புத்தியோட பொழைக்கணும்"



ஒரு முடிவோடு வீட்டு வேலைகளை கவனிக்கலானாள். செய்தி காட்டுத் தீயாய் மக்களுக்குப் பரவியது ....! மூத்த மகன் - இளைய மகன் - ஒரே மகள் மூவருமே இப்போது முழித்தார்கள். அந்தஸ்தில் உயர்ந்துவிட்ட அவர்களை எந்த முகத்தை வைத்துக்கொண்டு போய்ப் பார்ப்பது எனக் கூசினார்கள். மறு மலர்ச்சியோடு சச்சிதானந்தம் புதிய வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்தார்.

நன்றி - நிழல்கள், தமிழ் கூடல்

# உறுதியுடன் முயன்றால் எண்ணியதைச் சாதிக்கலாம்

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் **நேர்காணல்**

தரம் 10 இல் கல்வி கற்கும் ஜெ.தயூட்சகன், யுத்தம் இவனது வலது கையையும், வலது காலையும் தின்று விட்ட போதும் நம்பிக்கையை இழக்காது உறுதியின் குறியீடாய் திகழ்பவன்.

நாளை ஒரு பொறியியலாளனாய் நிமிர வேண்டும் எனும் கனவை நெஞ்சில் சுமந்து கொண்டு வாழ்வை எதிர் கொள்ளும் அம்மாணவனுடன் ஒரு நேர்காணல்

**கே: உங்கள் குடும்ப நிலை பற்றிக் கூறுங்கள்.**

ப: நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். எனது தந்தை ஒரு ஆட்டோ ஓட்டுநர். தாய் தையல் வேலை செய்பவர். எனக்கு இரு அண்ணாமார்களும் ஒரு தங்கையும் உள்ளனர். இளைய அண்ணா தரம் 11 இலும் தங்கை தரம் 7இலும் கல்வி கற்கின்றனர். யுத்தம் எனது அப்பாவின் உயிரைப் பறித்துவிட்டது. தற்பொழுது எனது மூத்த அண்ணாவினதும் அம்மாவினதும் அன்றாட உழைப்பிலேயே குடும்பம் இயங்குகிறது.

**கே: உங்களுக்கு எப்பொழுது பாதிப்பு ஏற்பட்டது? அப்பாதிப்பிலிருந்து எவ்வாறு மீண்டெழுந்தீர்கள்?**

ப: நாங்கள் முள்ளிவாய்க்காலில் இருந்தவேளை எனக்கு பாதிப்பு ஏற்பட்டது. அவயவங்களை இழந்த போது நான் இனி என்ன செய்யப்போகின்றேன் என்னும் கேள்வி என்னை வாட்டியது. காயம் ஆறிய பிறகு மன்னாரில் உள்ள ஒரு பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கப்பட்டேன். மாணவர்கள் என்னுடன் அன்பாகப் பழகினர். கற்று உயர வேண்டும் என்ற நம்பிக்கையோடு கல்வியைத் தொடர்ந்தேன். சிறிது காலத்தில் மீண்டும் எனது கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இணைந்து கற்கும் சூழல் ஏற்பட்டது.

**கே: தற்போது நீங்கள் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றீர்கள்?**

ப: உள்ளத்தில் உறுதி உள்ள போதும் சில பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டு தான் உள்ளன. வலது கை இல்லாமையினால் இடது கையினால் எழுதப் பழகினேன். தற்போது என்னால் இடதுகையின் துணை கொண்டு எழுத முடிகின்ற போதும் வலது கையால் எழுதிய போது இருந்த நேர்த்தியைப் பெறமுடியவில்லை என்ற வருத்தம் உண்டு. மேலும் கால் பாதிப்பினால் அண்ணாவுடனேயே பாடசாலைக்கு வருவேன். தனியார் கல்வி நிலையத்திற்கோ, வேறு தேவைகளுக்கோ தனியாகச் செல்வதில் சிரமத்தை எதிர்கொள்கிறேன்.

**கே: உங்களது பொழுது போக்கு பற்றி**

ப: எனக்கு துடுப்பாட்டம், பூப்பந்து விளையாட்டுக்களில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. அண்மையில் கலை சார்ந்த கருத்தரங்கு கொழும்பில் நடைபெற்றபோது அதில் நானும் கலந்து கொள்ள முடிந்தது. அவர்கள் புகைப்படக் கருவி ஒன்றை வழங்கினார்கள் தற்பொழுது புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் உள்ளது.

**கே: உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?**

ப: எனக்கு கணித பாடத்தில் நிறைந்த ஈடுபாடு உண்டு. பொதுவாக 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றுவிடுவேன். எனது கனவெல்லாம் படித்து பொறியியலாலனாக வந்து சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டுமென்பதேயாகும்.

**கே: மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

ப: வாழ்க்கையில் பிரச்சினைகள் வரும்போது சோர்ந்து விடக்கூடாது. எதை இழந்தாலும் நம்பிக்கையை மட்டும் இழக்காது உறுதியுடன் முயன்றால் எண்ணியதைச் சாதிக்கலாம். எனவே மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்துடன் கல்வி கற்று உயர வேண்டும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**கே: நிறைவாக உங்களுக்கு துணை நிற்பவர்கள் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்?**

ப: எனது வளர்ச்சிக்கு துணை நிற்கும் எனது கல்லூரியை நன்றியுடன் நினைக்கின்றேன். எனது நண்பர்கள், பொருளாதார ரீதியில் உதவும் அன்பு உள்ளங்கள், பாசமான என் குடும்பத்தினர் என அனைவருக்கும் எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அனைவரது எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும் வகையில் கல்வியில் எனது திறமையை வெளிப்படுத்துவேன்.

நன்றி - பேரிகை, கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு



## சுயம் இழக்காது . . .

செடியின்உடம்பெடுத்து
மண்ணில் புதைத்தேன்
துளிராது என்றிருந்தேன்

வேர் பற்றி . . .
இலையாய் துளிராய்

வைகோ கூறியது
பின் பற்றுதல்
சுயத்தை அழித்து
ஒழித்து விடுமென்று

துளிர் துளிர்க்க
இலைகள் கிளைகள் ...
சுயம் பறிபோகுமென்ற
பயமும் மனதை அரிக்க ..

மழையும் துளிர்த்தது
சுயம் இழக்காது
பூத்திருந்தது ரோஜா

– திருமலை சுந்தா –



## நடிக்கத் தெரிந்த சுதேசிகள்

மரத்துக்கு மரம் தாவும்
மந்தி அதே போல்
மதம் மாறிப் பாய்வோரும்
மந்தி!

பட்டம் பதவிகளுக்காக
அரசியல் வாதிகள்
பச்சோந்தியாகவும் மாறுவது
அரசியலில் உண்டு!

எடுப்பார் கைப்பிள்ளையாக
இருப்பவர்கள் அரசியலில்
தடுப்பாட்டம் போடாமல்
சுகமாயிருப்பார்கள்!

கோடையிடி போல குமுறல்
மேடையேறிவீட்டால் ஒலிக்கும்
மேடை கலைந்துவிட்டால்
அரசியல் வாடை மாறும் கோலம்!

நடிக்கத் தெரிந்தவர்கள்
அரசியல் மேடைகளில் நன்கு
ஆடத்தெரிந்தவர்கள்!

சேனையூர் மதுர் கிழக்கு

## 'வைத்திய கலாநிதி.த.ஜீவராஜ் அவர்களின் தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல்' தொடர்பான வாசகர் கடிதம்

சிவஸ்ரீ.இ.பாஸ்கரன் குருக்கள்
பாரதிபுரம், கிளிவெட்டி

பாரதிபுரம், கிளிவெட்டியைச் சேர்ந்த நான் தெரிவிப்பதாவது மலைமுரசின் சென்ற வாரப் பத்திரிகையில் வைத்திய கலாநிதி.த.ஜீவராஜ் அவர்களால் எழுதப்படுகின்ற தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல் கட்டுரையை வாசித்து அறிந்தேன். எதிர்பார்க்கவில்லை, நான் படித்துக் கொண்டிருந்த வேளை மிகவும் சந்தோசம் அடைந்தேன். அதாவது நான் இந்த பூமியில் பிறப்பதற்கு ஒரு காரணனாக இருந்த எனது தாயின் தகப்பனான வடிவேல் சிவப்பிரகாசம், எனது அம்மப்பா (பேரன்) பெயரைக் கண்டதும் அதிர்ச்சியுடன் எனக்கு பழைய ஞாபகத்தை ஏற்படுத்தியது.

தற்காலம் முன்னோர்களை அதுவும் கலை, கலாச்சாரத்தை பேணிக் காத்தவர்களை மறந்து கொண்டிருக்கும் காலத்தில் தங்களின் இக் க்கட்டுரை கண்டு நான் மகிழ்ச்சி அடைவதுடன் வரவேற்கின்றேன். அவரின் பேரன் என்ற ரீதியில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மலைமுரசிற்கும் நன்றி உடையவனாக உள்ளேன்.

மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் என்ற ரீதியிலும் எனது நன்றியும் வாழ்த்துக்களும்.

(குறிப்பு : வடிவேல் சிவப்பிரகாசத்தின் இரண்டாவது மகளான ஈஸ்வரியம்மாவின் நான்காவது பிள்ளையின் பிறப்பிடம் கட்டைப்பறிச்சான்.)

# கட்டைப்பறிச்சான் ஸ்ரீ அம்மச்சி அம்மன் பரிகல வேள்வி

இந்துக்களின் தொன்மையும் பாரம்பரியமும் மிக்க ஆலயங்களுள் திருக்கோணஸ்வரம் முதன்மை வாய்ந்ததாகும். தக்கனுடைய யாகத்தை அழித்து தாட்ஷாயணியின் உடலத்தைச் சுமந்து வீரபத்திரர் உக்கிர தாண்டவம் ஆடிய பொழுது அம்மனுடைய உடல் அங்கங்கள் ஒவ்வொன்றாக உலகின் 64 இடங்களில் விழுந்தனவாம். அவையே 64 சக்தி பீடங்களாக விளங்குகின்றன. அவற்றின் 18 மகாசக்தி பீடங்களாகும். இவற்றில் முதன்முதலில் தோன்றிய மகாசக்கி பீடம் திருக்கோணேஸ்வரமாகும். இங்கு சக்தி சங்கரி தேவியாக பரிணமிக்கின்றான். இராவணனுடன் போர் முடிந்த பிற்பாடு ஸ்ரீ இராமனும் விபீஷணனும், யோகினியை சூலினியை திக்கெங்கும் தாபித்து ஒங்கும் குன்றெனும் மச்சகேச்சுரத்தை வலம் வந்து போற்றி செய்து விடைபெற்றதாக திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைகூறும் ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்தின் ஏழாம் ஆயிரமாம் திருநகரச்சருக்கப்படலத்தில் கூறப்பட்டுள்ளது.

திருக்கோணேஸ்வரத்தின் பெருமை பாடும் திருக்கோணேசல வைபவம் எனும் வடமொழி பெயர்ப்பு நூலில் திரிகோணபீடத்தைச் சுற்றி ஒன்பது பிரகாரங்கள் உண்டென்றும், அதில் நான்காவதாகிய சந்திரகாந்தப் பிரகாரத்திலே சிவசொரூபமுள்ள ஐம்பத்தொரு சக்திகளும் சதாசிவத்தை தியானித்துக் கொண்டிருக்கும் ஒன்பது சக்திகளும் வசிப்பர் என்று கூறப்பட்டுள்ளது.

பன்குளம் பகுதியில் காணப்படும் பறையன்குளம் எல்லைக்காளிகோவில், சம்பூர் பத்திரகாளி அம்மன், திருக்கோணமலை பத்திரகாளி அம்மன், கூனித்தீவு வடபத்திரகாளி, தம்பலகாமம் மாரியம்மன் ஆலயத்திலுள்ள பத்திரகாளி அம்மன், ஈச்சிலப்பற்றுப் பகுதியிலுள்ள செம்பொன்னாச்சி அம்மன் இவற்றோடு கட்டைபறிச்சானிலுள்ள அம்மச்சி அம்மனும் கோணேஸ்வரத்தின் எல்லைக் காளிகளாக அமைந்து அருளாட்சி புரிகின்றன.

தற்காலத்தில் கட்டைபறிச்சான் என்று அழைக்கப்படும் பகுதியானது குளக்கோட்டன் காலத்து கொட்டியாபுரப்பற்றின் ஒருபகுதியாகும். இங்கிருந்து மக்கள் கோணேசப் பெருமானுக்கென பாக்கு, வெற்றிலை, குற்றமற்ற பால், தயிர், நெய்யும் நூறு அவணம் நெல்லும் கொடுத்து வந்திருந்தார்கள். அத்தோடு இலுப்பை, புன்னை, பருப்புக்களையும், சந்தனக் கட்டைகளையும் குறைவின்றி வழங்கியிருந்தார்கள். கோணேசர் கல்வெட்டு 16ம், 17ம் பாடல்கள் கொட்டியாபுரப்பற்று மக்களின் தொழும்புகள் பற்றி விவரிக்கின்றன. இப்பகுதியிலுள்ள மக்கள் சக்தி மற்றும் உக்கிர தெய்வங்களை வேள்வி செய்து வழிபட்டு வந்திருந்தார்கள் என்பது இன்றும் கண்கூடு.

சிந்துவெளி நாகரிகம் முதற்கொண்டு திராவிட வழிபாட்டுமுறை அனைத்திலும் தாய்த்தெய்வ வழிபாடு முதன்மை பெற்று விளங்கியதை வரலாற்றுச் சான்றுகள் வெளிக்காட்டி நிற்கின்றன. இறைவனை அம்மையாக பாவித்து 'தாயே!' என விழித்து வழிபடும் போது எம்மையறியாமலேயே மேலும் ஒரு படி இறைவனை நெருங்கியிருப்பதை எல்லோராலும் உணரமுடியும்.

எமது கிராமங்களான கட்டைபறிச்சான் சேனையூர் பகுதிகளில் அருளாட்சி புரிந்து வரும் சக்தியான எல்லைக்காளியை அம்மச்சி அம்மன் என்று அழைப்பதானது 'தாய்க்கும் தாயானவள்' என்பதோடு மட்டுமல்லாது மக்களுக்கும் இவ் அம்மனுக்கும் இடையான உள்ளார்ந்த தொடர்பை ஐயமின்றி உணர்த்தி நிற்கின்றது.

தமிழர்களின் பாரம்பரிய திராவிட வேள்வி முறை வழிபாடானது மகோன்னதம் வாய்ந்ததாகும். ஆண்டவனை மிகவுமாக நெருங்கி வாதம்புரிந்து வழிபடும் முறையாகும். இது ஆரிய ஆகமமுறையிலிருந்து வேறுபட்டதாகின்றது. திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நித்திய ஆகம முறையான வழிபாடுகளும், சல்லியம்பதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஆகம வேள்விமுறை கலந்த வழிபாடுகளும் இயம்பப்படுகின்றன. ஆரிய ஆகமகலப்பற்ற பழந்தமிழரின் திராவிட வேள்விமுறை வழிபாட்டை கட்டைபறிச்சான் ஸ்ரீ அம்மச்சி அம்மன் ஆலயத்தில் காணமுடியும். வேள்வி என்றதுமே அது உயிர்ப்பலியுடன் தொடர்புபட்டது என்ற எண்ணவோட்டம் எம்முள் பலபேர் மத்தியிலிருப்பது தவறானதாகும். பொதுவாக வேள்விகள். வருடமொருமுறை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் வேள்வி இயற்றப்படும் போதும் அவ்வத் தெய்வங்களுக்குரிய பத்ததிகளின் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன. வீரபத்திரன் வேள்வி, வீரமாகாளி வேள்வி, பத்தினி அம்மன் வேள்வி, நாகம்மாள் வேள்வி, மாரியம்மன் வேள்வி, பரிகல வேள்வி போன்றன இப்பிரதேசத்தில் இயற்றப்படும் வேள்விகளிற் சிலவாகும். இவ்வேள்விகள் அனைத்தும் அடிப்படையில் ஒருபோக்கு உடையதாக காணப்படினும் பத்ததிகளின் அடிப்படையில் பல்வகைமை யுடையதாகின்றன. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்ன வென்றால் இப்பிரதேசத்தில் நடாத்தப்படும் எந்தவொரு வேள்வியிலும் உயிர்பலி இடப்படுவதில்லை என்பதாகும்.

வேண்டுவோரை வரமளித்துக் காத்தருளும் கட்டைபறிச்சான் ஸ்ரீ அம்மச்சி அம்மனுக்கு இயற்றப்படும் பரிகலவேள்வி இப்பிரதேசத்தில் நடைபெறுகின்ற பெருவேள்விகளில் ஒன்றாகும். இது பன்நெடுங்காலமாக தலைமுறை வழியாக வருடமொருமுறை செய்யப்படுகின்ற வேள்வியாகும். இவ்வாலயத்தில் அம்மச்சி அம்மனுக்குரிய சிறிய மடாலயமும் மாரியம்மன், வீரபத்திரன், பரிகலம், வைரவர்கள் மற்றும் பட்டாணித் தெய்வத்திற்குரிய பீடங்களும் தாபிக்கப்பட்டுள்ளன..

இவ்வருடம் எதிர்வரும் 02.07.2014 புதன் கிழமையன்று ஸ்ரீ அம்மச்சி அம்மனுக்குரிய வேள்விப்பூசைகள் இடம்பெற [illegible] எதிர்வரும் 01.07.2014 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயத்தில் இருந்து மடைபெட்டி எடுக்கும் வைபவத்துடன் பரிகலவேள்வி ஆரம்பமாகின்றது. மடைப்பொட்டிகளும் அடியார்களின் பூசைப்பெட்டிகளும் ஆலயத்தை சென்றடைந்ததுடன் கன்னிக்கால் வெட்டிவருதல், கூடாரங்களுக்கு வெள்ளைகட்டுதல் போன்ற சடங்குகள் நடைபெறும். பின்னர் அம்மனுக்கும் அம்மன் கைபொருட்கள், அடையாளங்களுக்கும் அபிஷேகம் நடைபெற்று விநாயகர் மடை வைத்தலுடன் கும்பங்கள் தாபனம் செய்யப்படும். மாரியம்மன் கூடாரத்தினுள் வாலை, புனை, திரிபுரையாளுக்கும் வீரபத்திரன் கூடாரத்தினுள் பெருமானுக்கும் யந்திர மந்திர உச்சாடனங்களுடன் பறைமுழங்க கும்பங்கள் நிறுத்தப்படும். அதன்பின்னர், பத்ததியிலுள்ளவாறு தெய்வங்களுக்குரிய பூ, பழமடைகள் வைக்கப்படும். இங்கு வைக்கப்படும் ஒவ்வொரு மடையும் அர்த்தம் நிறைந்ததாகும். கும்பங்களுக்குரிய தூப தீப ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டு அதன் பிற்பாடு தலைமைப் பூசகரினால் தீக்கிடங்கில் அக்கினி மூட்டுதல் இடம் பெற்று உதயத்தில் அம்மனுக்குரிய பொங்கல் நடைபெறும். காலை குளிர்த்திக் குடம் நிறுத்தலுடன் ஏழு கன்னிமார்கள் துள்ளுமா இடித்தல் சடங்கு நிறைவுபெற்று சுற்று மடை பூசை முடித்து காலை 10.30 மணியளவில் அம்மனுக்குரிய பூசைகள் பறையொலிக்க ஊடுக்கு தெளிக்க கும்மிப்பாடல்களுடன் தெய்வங்கள் கலையேறி ஆடுவதுடன் பூசைகள் நடைபெறும்.



மாரியம்மன் கூடாரத்திலுள்ள பூசைகள் ஆரம்பமாகியதன் பின்னர் தலைமைப் பூசகர் திரு.பு.கருணாகரன் தலைமையில் தீமிதிப்பு நிகழும். அதன் பின்னர் பரிகலப் பூசைமுடித்து பரிகலத்திற்கு அரிசி எறிதல் சடங்கு இடம்பெறும் அதன் பின்னர் வைரவர்களுக்குரிய பட்டாணித் தெய்வங்களுக்குரிய பூசைகள் முடிக்கப்பட்டு ஏழு கன்னிமாருக்கும் காத்தவ்ராயருக்கும் அமுதூட்டல் இடம் பெறும். இறுதியாக அம்மன் திருக்குளிர்த்தி பாடி அம்மனும், மக்களும், ஊரும் குளிர்ந்தருளப்பட்டு வேள்விப் பூசைகள் இனிதே நிறைவுறும். ஈற்றில் தாபிக்கப்பட்ட கும்பங்கள் தக்கமுறைகளின் படி சொரிக்கப்பட்டு வேள்வி முற்றுப்பெறும்.

திருக்கோணேஸ்வரத்தின் எல்லைக்காளியாகவும், தொன்மைமிகு கொட்டியாபுர மக்களின் உணர்வுகளோடு ஆத்மார்த்தமாக இணைந்திருக்கும் கட்டைபறிச்சான் ஸ்ரீ அம்மச்சி அம்மனுக்கு இயற்றப்படும் பரிகல வேள்வியிற் கலந்து அம்மனின் அருட்கடாட்சத்தை பெறுவோமாக!

சு.சிவசங்கரன், இணைப்பூசகர்
கட்டைப்பறிச்சான் ஸ்ரீ அம்மச்சி அம்மன் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துவாரா – ஸ்ரீதேவி

இயக்குனர் விஜய் இயக்கும் 'சைவம்' படத்தின் மூலம் நடிகையாக அறிமுகம் ஆகிறார் துவாரா. ஏற்கெனவே, காஞ்சிவரம் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான இவர் 'சைவம்' படத்தில் நாசரின் மகன் பாஷாவின் ஜோடியாக நடிக்கிறார். துவாரா குறித்து இயக்குனர் விஜய் கூறும்போது, துவாரா இளம்வயது ஸ்ரீதேவியை நினைவுபடுத்துகிறார்.

## 'எந்திரன் 2'



ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்க 'எந்திரன்' படத்தின் இரண்டாம் பாகமாக 'எந்திரன் 2' தயாராகும் என கடந்த வாரம் செய்திகள் வெளியானது. இது சம்பந்தமாக இயக்குனர் ஷங்கரும், ரஜினிகாந்தும் சந்தித்துப் பேசினார்கள். ஆனால் சமீபத்தில் கிடைத்த தகவலின்படி 'எந்திரன் 2' படத்தில் ரஜினிகாந்த் நடிப்பது சந்தேகம்தான் என்கிறார்கள். அதற்குக் காரணம் ரஜினிகாந்தின் உடல்நிலைதான்.

ரஜினிகாந்த் அவருடைய உடலை வருத்திக் கொண்டெல்லாம் நடிக்கக் கூடாது என டாக்டர்கள் சொல்லியிருப்பதே காரணமாகும்.

## புது காதலியுடன் ரூயட்டா!!



எதிர் நீச்சல், வணக்கம் சென்னை படங்களுக்கு அனிருத் இசையமைத்தார். அப்போது இருவருக்கும் நெருக்கம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. ஏற்கனவே ஆன்ட்ரியாவும் அனிருத்தும் காதலித்தனர். இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்களும் இன்டர்நெட்டில் பரவி பரபரப்பை ஏற்படுத்தின. தற்போது அந்த காதல் முறிந்து அனிருத், பிரியா ஆனந்த் இடையே புது காதல் மலர்ந்துள்ளதாக கிசுகிசுக்கப்பட்டது.

## விஜய் VS அக்ஷய்குமார்



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய், சமந்தா இணைந்து நடிக்கும் கத்தி படத்தின் படப்பிடிப்பே இன்னும் முடியாத நிலையில் அதன் இந்தி உரிமையை வாங்க பலத்த போட்டி நிலவுவது இதுவே முதல் முறையாக இருக்கும் தமிழில்.

இந்த இந்தி உரிமையை வாங்க அக்ஷயகுமார் அதிக ஆர்வம் காட்டுவதாக கூறப்படுகிறது. ஏனெனில் ஹாலிடே (துப்பாக்கி) படத்தின் ஹீரோ இவர் தான் எனவே மீண்டும் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கத்தான் இந்த ஆர்வம்.

## தயாராகும் ரசிகர்கள்



கமல்ஹாசன் நடித்து மூன்று படங்கள் வெளிவர உள்ளது. கமல் நடித்து 'விஸ்வரூபம் 2' படத்தின் முழு படப்பிடிப்பும் முடிவடைந்துவிட்டது. இறுதிக்கட்டப் பணிகள் நடந்து வருகின்றன. 'உத்தம வில்லன்' படப்பிடிப்பு விரைவில் முடிவடைய உள்ளது. இதன் பின் 'த்ரிஷ்யம்' படத்தின் ரீமேக் படப்பிடிப்பில் கமல் ஜூலை மாதம் முதல் கலந்து கொள்ள உள்ளார்.

இந்த மூன்று படங்களும் இந்த ஆண்டில் அடுத்தடுத்து வெளிவரும் வாய்ப்புள்ளது. ஆனாலும், ஒரு படம் 50 நாட்கள் ஓடி முடிப்பதற்குள் அடுத்த படம் வெளிவந்துவிடும் என்றே தெரிகிறது. கமல்ஹாசன் நடிப்பில் நீண்ட இடைவெளிக்குப் பின் ஒரே ஆண்டில் மூன்று படங்கள் வெளிவர உள்ளது ஆச்சரியமான விஷயம்தான்.


## சால்ட் அன்ட் பெப்பர் ஆகும் சூர்யா



தமிழ் சினிமாவில் தன் நரைமுடி தோற்றத்தை மறைக்காமல் நடித்து அதிலும் ஹிட் கொடுத்தவர் அஜித். தற்போது இந்த லிஸ்டில் இணைந்திருக்கிறார் "அஞ்சான்" சூர்யா. தன் தம்பி கார்த்தி நடித்த "மெட்ராஸ்" படத்தின் இசை வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்த சூர்யா நரைமுடி தாடியுடன் காட்சியளித்திருக்கிறார். தல முதன் முதலாக வெங்கட் பிரபு இயக்கத்தில் மங்காத்தா திரைப்படத்தில் தான் இப்படி நடித்தார், சூர்யாவும் அடுத்து இவர் இயக்கத்தில் தான் நடிக்க போகிறார், ஒருவேளை அந்த படத்தின் கெட்டப்பாக இருக்குமோ என்று கோலிவுட்டில் கிசுகிசுக்க ஆரம்பித்துவிட்டனர்.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **4 மொழிகளில் தயாராகும் லகுட பாண்டியர்கள்**

லகுட பாண்டியர்கள் என்ற படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு மொழிகளில் தயாராகிறது. மகாதேவ், கிருஷ்ணா, அமர், தேஜா ஆகியோர் ஹீரோக்களாக நடிக்கிறார்கள். அஞ்சனா ஹீரோயினாக நடிக்கிறார்.

- **முடிவு அஞ்சலி கையில்**

ஊர் சுற்றி புராணம் படத்தில் ஹீரொயினாக 2013ல் ஒப்பந்தமாகி பின்னர் குடும்பப் பிரச்சினையால் நடிக்க மாட்டேன் என்று கூறிய அஞ்சலிக்கு இப்படத்தினை நடித்துத் தராவிட்டால் அதற்கான முழு செலவையும் அவரே பொறுப்பேற்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

- **நட்புக்கும் காதலுக்குமிடையில் சிக்கித் தவிக்கும் நயன்**

போலீஸ் அதிகாரி வேடத்தில் நடிக்கும் தனியொருவனில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நடித்தாலும், இந்த படத்தின் முக்கிய கேரக்டரில் நடிக்கும் கணேஷ் வெங்கட்ராமனுக்கு நெருங்கிய நண்பராகவும் நடிக்கிறார்.

- **எனக்கே தெரியாமல் எல்லாம் நடக்கிறதே - சமந்தா**

நான் நடித்த படமொன்று வரும் 27ம் தேதி ரிலீஸ் ஆகப்போகிறதாமே யாருக்காவது தெரிந்தால் எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கள் என்று நக்கலாக குறிப்பிட்டிருக்கிறார்.

- **அப்புறம் என்ன ஹோலிவூட் தான்**

இவருக்கு இவரே பேனர் அடிப்பது. போஸ்டர் அடிப்பது என்று நம்மை டார்ச்சர் செய்த பவர் பாலிவுட்டுக்கு போக போகிறாராம்.

- **ரஜினியின் சம்பளத்தைவிட அதிகமாக சம்பளம் கேட்ட சந்தானம்**

லிங்காவில் ஒருசில காட்சிகளில் மட்டும் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கும் சந்தானம் நாள் ஒன்றுக்கு ரூ.15 லட்சம் கேட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த சம்பளம் ரஜினியின் சம்பளத்தை விட அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

- **பிரபல தொலைக்காட்சி நடிகர் தற்கொலை**

பல் டி.வி. சீரியல்களிலும், ஏராளமான விளம்பரங்களிலும் நடித்துள்ளவர் ஏ.சி.முரளிமோகன். இவர் இன்று தன் வீட்டில் தற்கொலை செய்துகொண்டதாக கூறப்படுகிறது.

## லிப் லொக் கற்பிக்கும் கமல்



தமிழ் சினிமாவின் மூத்த கலைஞனும் சரி, முத்த கலைஞனும் சரி அது கமல் தான். இதில் நான் திரைப்படம் இயக்கும் போது கமல் படத்தை தாம் மாதிரியாக எடுத்துக்கொள்வேன், அவர் சிரிப்பு, அழுகை போன்ற பலவற்றை பார்ப்பேன், ஏன்? அவர் முத்தம் கொடுக்கும் அழகை கூட ரசித்து, அதற்கு ஏற்றாற் போல் தான் என் படத்தின் கதாநாயகர்களை நடிக்க சொல்வேன்' என்று தெரிவித்துள்ளார்.

திரை விமர்சனம்

## வடகறி



சென்னையில் சாதாரண குடும்பத்தில் அண்ணன் மற்றும் அண்ணியுடன் வாழ்ந்து வரும் ஜெய்க்கு, மெடிக்கல் ரெப் வேலை கிடைக்கிறது. முதல் மாத சம்பளத்தில் விலையுயர்ந்த போன் வாங்க முடிவு செய்கிறார் ஜெய். ஆனால் அவரது அண்ணன் வெறும் இரண்டாயிரம் மட்டும் கொடுக்க வேறு வழியின்றி சாதாரண கொரியன் போன் வாங்கிகுகிறார். அந்த போனில் சத்தம் அதிகம் வருவதால் அதை மாற்ற முடிவு செய்கிறார். இந்நிலையில் ஒரு விலையுயர்ந்த ஐபோன் ஒன்றை அனாதையாக இருப்பதை பார்த்து அதை எடுத்து பயன்படுத்துகிறார்.

இந்நிலையில் அந்த மொபைலுக்கு ஒரு போன் வருகிறது. உடனே சரக்கை வந்து ஒப்படைத்துவிடு என்கிறது ஒரு மர்ம குரல். ஜெய் அண்ணன், எம்.ஜி.ஆரின் ரசிகராக நேர்மையாக இருப்பதை பார்த்து, தானும் நேர்மைக்கு மாற முடிவு செய்து அந்த ஐபோனை உரியவரிடம் சென்று ஒப்படைக்க முடிவு செய்கிறார். எனவே தனக்கு போன் அழைப்பு வந்த நபரிடம் முகவரியை கேட்டு போனை ஒப்படைக்க முன்வரும்போது, அந்த நபரின் ஆட்கள் ஜெய்யை அடித்து உதைத்து கடத்துகின்றனர். காலாவதியான மருந்தை வேறு தேதி போட்டு விற்பனை செய்யும் கூட்டம்தான் தன்னை கடத்தியது என்பது ஜெய்க்கு தெரிய வருகிறது. பின்னர் ஜெய் அவர்களிடம் இருந்து தப்பித்தாரா? என்பதுதான் மீதிக்கதை.

இதனிடையில் நண்பன் பாலாஜியின் வீட்டின் அருகே ஸ்வாதியை பார்க்கும் ஜெய், அவரை காதலிக்கிறார். ஸ்வாதியின் தோழி ஜெய்யை காதலிக்கிறார். ஜெய்-ஸ்வாதி ஜோடி காதல் என்னவாயிற்று என்பதும் இரண்டாவது பாதியில் தெரிய வருகிறது.

ஸ்வாதிக்கு படத்தில் பாடலுக்கு வந்து நடனம் ஆடிவிட்டு செல்லும் வேடம். ஜெய்யுடன் சிலநேரங்களில் காதல் செய்கிறார். தோழியோடு அரட்டை அடிக்கிறார். எப்.எம். ரேடியோவில் ஆர்.ஜேவாக இருந்த பாலாஜி, கலகலப்பு படத்திற்கு பின்னர் அனைவரையும் சிரிக்க வைக்கும் கேரக்டரில் நடித்துள்ளார்.




இளைஞர்கள் பலரும் பெரும் ஆவலுடன் எதிர்பார்த்த சன்னிலியோன் பாடல் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. மருத்துவத்துறையில் இருக்கும் தவறுகளை சுட்டிக்காட்ட நினைத்த இயக்குனர் சரவணன்ராஜன், மெயின் கதையை சில நிமிடங்கள் மட்டும் கூறிவிட்டு தேவையில்லாத காட்சிகளை நிரப்பி படத்தை முடித்துள்ளார்.

சுவையில்லாத சாதாரண வடகறி ருசிக்கவில்லை என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைர நட்சத்திரம்



விண்வெளியில் பூமி அளவில் மிகப்பெரிய வைரத்தை அமெரிக்க வானியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மிகவும் குளிர்ச்சியான வெளிப்படையாக தெரியும் வெள்ளை நிற சிறிய நட்சத்திரங்களை வானியல் ஆய்வாளர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

அந்த வரிசையில் இப்போது மிகவும் குளிர்ச்சியான மங்கலான ஒரு நட்சத்திரத்தை விஸ்கான்சின் மில்வாகி பல்கலைக்கழக பேராசிரியர் டேவிட் கப்லான் தலைமையிலான ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அதன் கார்பன் படிகமாகி அதன் விளைவாக பூமியை ஒத்த அளவில் ஒரு மிகப்பெரிய வைரமாக விண்வெளியில் மிதக்கிறது. இதன் வெப்பநிலை 2700 டிகிரி செல்சியஸ் இருக்கும் என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். மிகப்பெரிய நட்சத்திரத்தில் இருந்து உடைந்து படிகமான இந்த மிகப்பெரிய நட்சத்திரம் முழுவதும் வைரமாக இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## ஸ்மாட்டில் பக்டீரியா

ஒவ்வொரு மனிதரினதும் விரல் அடையாளங்கள் எந்தளவு தனித்துவமானதோ, அந்தளவு தனித்துவமான பக்டீரியாக்கள் தொகுதிகளும் இருக்கின்றன. இந்த தனித்துவமான பக்டீரியா



தொகுதி ஸ்மாட் போனின் தொடுதிரையில் பிரதி பலிப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பக்டீரியாக்கள் எந்தளவு பரவி இருக்கின்றன என்பதை கண்டறிவதற்கு ஸ்மாட் போன்களை பயன்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

மனிதனது உடலுக்குள்ளேயும், வெளியேயும் வாழும் நுண்ணுயிர்களின் வரைபடத்தை ஸ்மாட் போன்களில் பெறலாம் என்பது விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பாகும்.

## கூகுளின் புதிய சேவை

கூகுள் நிறுவனத்தின் பல்வேறு சேவைகளுள் ஒன்றான Google Play Movies ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களே



ஆன நிலையில் மேலும் 21 நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன் மூலம் புதிய திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்கள் போன்வற்றினை கொள்வனவு செய்யவும் மொபைல் சாதனங்களில் பார்த்து மகிழவும் முடியும்.

இதேவேளை Google Play Books சேவையும் மேலும் 12 நாடுகளுக்கு விஸ்தரிக்க கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## சூப்பர் கணனிகள்



உலகெங்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சுப்பர் கம்பியூட்டர்களில் சீனாவின் Tianhe-2 கணனியே தொடர்ந்தும் முன்னிலையில் காணப்படுகின்றது. சீனாவின் பாதுகாப்பு தொழில்நுட்பத்திற்கான தேசிய பல்கலைக்கழகத்தில் காணப்படும் இக்கணினி 33.86 petaflops/s எனும் வேகத்தில் செயலாற்றக்கூடியதாக இருக்கின்றது.

முதன்மையான 500 சுப்பர் கம்பியூட்டர்கள் தொடர்பான தகவல்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றுள் 63 தொடக்கம் 76 வரையான கணினிகள் சீனாவிலும், பிரித்தானியாவில் 30 கணினிகளும் காணப்படுகின்றன.



## கணனியை விரைவாக்க

Windows XP Operating System இன் கணனியின் My Computer ஐ Open செய்வதற்கு அதிக நேரம் எடுக்குமாயின் இவ்வாறு செய்து பார்க்கவும்.

- My Computer ஐ திறந்து கொண்டு அதில் உள்ள Tools மெனுவில் Folder Options வசதியை க்ளிக் செய்யுங்கள்.
- இனி திறக்கும் Folder Options விண்டோவில் View Tap சென்று, அங்கு Files and Folders இற்கு கீழாக உள்ள "Automatically search for network folders and printers" என்பதற்கு நேராக உள்ள Check Box ஐ uncheck செய்து விடுங்கள்.
- பின்பு OK என்பதை அழுத்தி விடுங்கள்.

## மொபைலில் கூகுள் மேப்



கூகுள் நிறுவனம் வழங்கி வரும் பல்வேறு இணையத்தள சேவைகளினுள் கூகுள் மேப் சேவையும் பிரபல்யம் வாய்ந்த ஒன்றாகும்.

இதனை மொபைல் சாதனங்களில் பயன்படுத்துவதற்காக விசேட அப்பிளிக்கேஷன்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் அன்ரோயிட் சாதனங்களில் பயன்படுத்துவதற்காக மட்டும் ஒரு பில்லியன் தடவைகள் வரை இந்த அப்பிளிக்கேஷன் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# ஒரு கொலையின் கதை

2-18

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை....... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

மது தனது வாக்குமூலத்தை அக்கணத்தில் நிறுத்தினார்..... அவருக்கு மெதுவாக வேர்க்கத் தொடங்கியதை புலனாய்வாளர்கள் அவதானித்தனர்... முக்கியமான விடயமொன்றை அவர் அதற்குப்பின்னரே வெளிப்படுத்தவுள்ளதை அவரது அசைவுகள் புலப்படுத்தியது.......

நான் 28ம் திகதி வந்த போது எனக்குத் தெரிந்த ஒருவர் பத்திரிகைக் கிழிசலொன்றை என்னிடம் தந்தார்.... அதிலிருந்த செய்தி..........

(17)..............................

திருகோணமலையில் நடந்தேறியிருந்த கொலை தொடர்பான தகவலாக இருந்தது......

மது தனது வாக்குமூலத்தை நிறுத்தி மிடறு விழுங்கினான்.... பின் தொடர்ந்தான்....

நான் தொடர்ந்து வாசிக்கத் தொடங்கினேன்... அச் செய்தி திருகோணமலையில் விளையாட்டு வீரன் ஒரவன் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட செய்தியாக இருந்தது.....

புலனாய்வாளர் இடைமறித்தார்..... "மது அந்தப் பத்திரிகைச் செய்திதான் நீ முதன் முதலில் பார்த்த செய்... அப்படித்தானே..."

" ஓம் சேர்...."

" உனது நண்பன் உனக்குக் காட்டியது கிழிந்த துண்டு எனச் சொன்னாய் முதலில்...."

" ஓம் சேர்"

" இப்ப அந்தத்துண்டை பத்திரிகை எண்டு எப்படிச் சொல்லுறாய்...?"

" சேர் நான் உங்களிட்டை சொல்லுறது தான் உண்மை.... நான் பாத்தது பத்திரிகையில் இருந்து கிழக்கப்பட்ட துண்டுதான்... அது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு.....!"

அவன் அந்த இறுதி வார்த்தையை முடிக்க புலனாய்வாளர் ஒருவர் திடுக்கிட்டுத் தனது வார்த்தையைப் பிரயோகித்தார்...

"இப்ப காட்டினாலும் உனக்கு ஞாபகம் இருக்குமா மது?.....

"ஓம் சேர்... நான் மறக்கேல்ல... என்னால ஏலும்".... அவன் திட்டவட்டமாக அந்த வார்த்தையை உதிர்த்தான்....

" சரி மேற்கொண்டு சொல்"....

நான் அந்தச் செய்தியை வாசித்தேன் கிரிக்கட் விளையாட்டு வீரரின் கொலை குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது என்ற செய்தியும் அதில் காணப்பட்டது. நான் வாசித்து முடித்து விட்டு எனது நண்பனிடம் இத் தகவலை என்னிடம் ஏன் காட்டினாய் என்று கேட்டேன் அதற்கு அவன் அளித்த பதில்..... ''இது அலிக அண்ணாவின் வேலை''..... "எங்கடையாளும் உதவி" எனச் சொன்னார்......

" அலிக அண்ணாட வேலையா...." நான் சற்று அதிர்ச்சியடைந்ததுடன் அவன் யாரை 'எங்கட ஆள்' எனக் குறிப்பிட்டான் எனத் தெரியாமல் சங்கடப்பட்டேன்....

"எங்கட ஆள் எண்டு நான் சொன்னது டொடிய" என்றான் அவன். நான் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தேன் பின்னர் டொடி யுடன் நேரடியாக இவ்விடயத்தைப் பேசுவது என்று முடிவெடுத்தேன்..... கைத்தொலைபேசியூடாக டொடியைக் கடைக்கு வருமாறு பணித்தேன்.....

சிறிது நேரத்தில் டொடி எனது கடைக்கு வந்தான்... வந்தவுடன் என்னைக் குசலம் விசாரித்தான்....நான் அவனது கேள்விகளுக்கு எவ்வித பதிலையும் சொல்லாமல் அவனை நேராக விறைத்துப்பார்த்தபடி இருந்தேன்....

" என்ன மது ஐயா!..... என்ன டவுட்..... கேளுங்க ஐயா...." நான் எனது கையிலிருந்து அந்தக் கிழிந்த பத்திரிகைச் செய்தியை அவனுக்குக் காட்டினேன்.....

" எனக்குத் தெரியும் ஐயா... நீங்க கடைக்கு வந்தோன்ன என்னைக் கூப்பிடுவிங்கள் என்று" உங்களுக்கு ஒரு பிரச்சனையும் வராது.... நானும் அலிக ஐயாவுடன் ஒரு வேலைக்குப் போனநாங்கள்..." என்று சொல்லும் போது அவனுடைய சுட்டு விரல் எனது மேசையில் கிடந்த அந்தப் பத்திரிகைத் துண்டினைச் சுட்டி நின்றது. நான் புரிந்துகொண்டேன்......

"மடையனே.... ஏன் இந்த மாதிரி வேலைகளுக்கு நீ போறாய்" எனது கோவம் கட்டுக்கடங்காமல் அவன் மீது எரிச்சலாகப் பாய்ந்தது.... நீ செய்த இந்த வேலையால நாங்களும் எல்லா ஆபத்தில மாட்டியிருக்கிறம்..... இஞ்ச இருக்கிற உண்ட அறையில இருக்கிற எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு போ..போயிரு.. இஞ்ச இனி வராத... என நான் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்தேன். டொடி பேசாமல் என்னைப் பார்த்துக்கொண்டு நின்றான்...

பின்னர் அவன் எனது கடையைவிட்டு இறங்கிச் சென்றான்.....அதன் பின்னர் அவனை நான் சந்திக்கவில்லை....

மது தனது வாக்குமூலத்தை முடித்ததற்கான சைகைகளை ஏற்படுத்தினான்...

" இவ்வளவுதானா.... அல்லது இன்னும் ஏதம் இருக்கா?..."

" இல்லை இவ்வளவும் தான்...."

" சரி... நான் கேக்கிறதுக்கு பதிலைச் சொல்லு..."

"ஓம் சேர்"

" அந்தக் கொலையில் டொடியும் அலிகவும் சம்பந்தப்பட்டிருப்பது உனக்கு தெரிந்த பின் ஏன் காவல் துறைக்கு இந்த விடயத்தை தெரியப்படுத்தவில்லை...."

அவன் இந்தக் கேள்வியை எதிர்பாத்திருந்தான் போலும்.... உடனடியாகவே அவன் அக்கேள்விக்கோர் பதிலையீந்தான்.....

''நானாகவே போய் இந்த விடயத்தைக் காவல் துறைக்குச் சொல்லப் பயமாக இருந்தது...விடயம் முழுவதுமாக வெளிவர முதல் நான் போய்ச்சொல்லி...அதன்பால் நானும் கைது செய்யப்பட்டால்...எனது பெயர் கெட்டுவிடும் என்பதால் நானாக எதனையும் சொல்வதில்லை என முடிவு எடுத்தேன்...ஆனால் விசாரணையென வந்தால் எல்லாவற்றையும் சொல்லிவிடுவது எனத் தீர்மானித்தேன்......"

"டொடி எப்போது தானிருந்த அறையை விட்டுப் போனான்.... ?"

" நான் கோபமாகக் கத்திவிட்டு எனது வீட்டிற்குப் போய்விட்டேன்... அதனைத் தெரிந்து அன்று மாலையே டொடி தனது நண்பனான பிலிந்தவுடன் வந்து அறையில் இருந்த பொருட்களை எடுத்துச் சென்றான்."

" அந்த அறையில் என்ன பொருட்களை அவன் வைத்திருந்தான்????"

" பெரிதாக எதுவுமில்லை...உடுப்புத் தான்... ஆனால் நான் விபத்தடைந்த பின்னர் அவன் அறையை விட்டு வெளியேறும் வரைக்கும் அவனது அறைக்கு போகவில்லை... அப்போது ஏதும் வைத்திருந்தானோ தெரியாது?...."

" அதற்குப் பின் பிலிந்தவைக் காணவில்லையா?..."

" பல தடவை சந்தித்தேன்..."

" பிலிந்த ஏதாவது சொன்னானா?"

" ம்..... டொடி தன்னிடம் சில பொருட்கள் தந்ததாகச் சொன்னான்... அதை ஒரு பையில் போட்டு பிலிந்த தனது வீட்டில் வைத்திருப்பதாகச் சொன்னான்... எடுத்துக் கொண்டு வா?.... என்று நான் சொன்னேன்... அன்று தனக்கு வேலையிருப்பதாகச் சொன்ன அவன் மறுநாளே அந்தப் பையை எடுத்துவருவதாகக் கூறினான்......"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

# மனிதனும் புரிதலும்

நாம் அனைவருமே இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என்ற மதங்களில் ஏதோ ஒன்றை தழுவியிருக்கின்றோம். சிவன், புத்தர், அல்லாஹ், இயேசு என நாம் வணங்கும் தெய்வங்களும் வேறுபடுகின்றன. மதங்கள் எம்மை சரியான பாதையில் செல்வதற்கு நெறிப்படுத்துகின்றன!

ஆனால் மக்கள் அனேக சந்தர்ப்பங்களில் மதவிரோத செயல்களில் ஈடுபடுவது இந் நாட்களில் சாதாரணமாக உள்ளது.

அதற்கு காரணம் மனிதன் தன்னைப் பற்றிய சரியான புரிதல் இன்றி இந்த உலகத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதே!

நாம் யார்?

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் உடல், மனம், புத்தி ஆகிய கருவிகளாலும் அவற்றை இயக்கும் பேரான்மாவாலும் உருவாக்கப் பட்டுள்ளான்.

நீங்கள் முதலில் ஒரு உண்மையை புரிந்து கொண்டு அப்பால் செல்ல வேண்டும். எது சூட்சுமமானதோ அதுவே மிகவும் சக்தியானது. ஐம்பூதங்களை எடுத்துக் கொள்வோம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

நிலத்தை நாம் பார்க்கிறோம், பரிசிக்கிறோம், நுகர்கிறோம், சுவையுணர்கிறோம், கேட்கிறோம். அதாவது ஐம்புலன்களாலும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) உணரக்கூடியதாக உள்ளது. அது கடினமானது. ஆனால் நீரை எடுத்தால் அது நிலத்தைக்காட்டிலும் சூட்சுமமானது. அதனால் அதன் சக்தியும் அதிகம். அதே போல் தீயை எடுத்தால் அது இவை இரண்டையும் விட சூட்சுமமானது. சக்தியும் அதிகம். ஒரு இரும்பையே உருக்கிவிடும். காற்று எமது புலன்கள் சிலவற்றால் மட்டும் உணரக்கூடிய அளவு சூட்சுமமானது. அது கடலையே புரட்டிப் போடவல்லது. ஆகாயம் அனைத்தையும் விட சூட்சுமமானது. இந்த பிரபஞ்சத்தையே தாங்கவல்லது.

இப்போ விடயத்திற்கு வருவோம். மனிதன், உடல், மனம், புத்தி ஆகிய கருவிகளால் உருவாக்கப்பட்டு பேரான்மா என்ற சக்கியால் உயிரூட்டப்படுகின்றான் என்பதை முதலில் கண்டோம்.

எமது உடல் சூட்சுமமானது. மனம் அதை விட சூட்சுமமானது. புத்தி அதனையும் விட சூட்சுமமானது. இப்போ உடல், மனம், புத்தி ஆகிய கருவிகள் பற்றி தனித்தனியே புரிந்து கொள்வோம்.

உடல் :- உடல் ஸ்தூலமானது, ஐந்து கர்மேந்திரியங்களையும் (நா, கைகள், கால்கள், கருவாய் மற்றும் பெருவாய்) ஐந்து ஞானேந்திரியங்களையும் (கண், காது, மூக்கு, வாய், மெய்) கொண்டது.

மனம் :- ஞானேந்திரியங்கள் ஏற்படுத்தும் பாதிப்பு எண்ணங்களாகின்றன. அந்த பாதிப்பு எண்ணங்களில் குழப்பத்தை விளைவித்து அமைதி யின்மையையும் முடிவின்மையையும் உருவாக்குகின்றன. அந்த நிலையே மனம் ஆகும். தண்ணீரின் ஓட்டத்திலிருந்து ஆறு உருவாகுவது போல எண்ணங்களின் ஓட்டம்தான் மனதை உருவாக்குகிறது.

புத்தி :- காட்டாற்று வெள்ளம் போல ஓடிக்கொண்டிருக்கிற மனதை ஒரு நிலையில் அடக்கி, கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து எண்ணங்களாகிய ஆற்றின் திசையை முடிவு செய்வது புத்தி ஆகும். எமது புத்திக்கு வலுக் கொடுப்பதற்கு சாஸ்திரங்கள் உள்ளன!

இப்போ கட்டுரையின் ஆரம்ப நிலைக்கு வருவோம். ஏன் அண்மைக்காலத்தில் மத விரோத செயல்கள் அதிகரித்திருக்கின்றன? அவற்றை தவிர்ப்பதற்கான வழி முறைகள் எவை என்பதை பார்ப்போம்.



(வி.என்.சந்திரகாந்தி)

மனிதன் மத வெறி கொள்வதை விடுத்து, காட்டாற்று வெள்ளம் போல பாய்ந் தோடும் மனதை கட்டுப் படுத்தவல்ல புத்தியை விருத்தி செய்வதொன்றே அதற்கான வழியாகும்!

அகங்காரம் :- நான் என்ற உணர்வு எம்முள் நிலை கொண்டுள்ளது. சந்தேகிப்பதும் முடிவெடுப்பதும் தனியொருவனுக்கு சொந்தமாக உள்ளது. நான் சந்தேகிக்கிறேன்….. நான் முடிவெடுக்கிறேன் என்ற எண்ணத்தில் தோற்றம் பெறும் நான் என்ற எண்ணத்தின் செயல்பாட்டு உருவே அகங்காரம். சந்தேகம், முடிவு, நான்-எனது என்ற மூன்று சூட்சும சரீரத்துக்கும் உயிரூட்டுவது சித் எனப்படும் சக்தியாகும். வரையறையற்ற உணர்வு நிலை சித்தாகாசம். அது எங்கும் நிறைந்தது!

எனது ஊரில் வைரவர் கோயில் ஒன்று இருக்கின்றது. வருடம் ஒரு முறை அங்கு எட்டாம் மடையின் போது ஆடு, சேவல் என உயிர்கள் பலியிடப்படும். படித்த சில இளைஞர்கள் உயிர்ப்பலி கொடுப்பது அநாகரீகம் என கூறி கோயில் ஐயர் அப்படி செய்வதை தடுத்தனர். அக் காலத்தில் ஊருக்கு ஒரு சண்டியன் இருப்பான்.

ஐயருக்கு வழமையை மாற்றுவது விருப்பமில்லை. எனவே அவ்வூர் சண்டியனான செல்லையனிடம் முறையிட்டார். அவனும் ஐயருக்கு தைரியமூட்டி நீங்கள் வழமை போல வேள்வியை செய்யுங்கோ, நான் பிரச்சனைகளை பார்த்துக் கொள்கிறேன் என உறுதியளித்தான். வேள்வியும் நடந்தது. ஆனால் செல்லையனால் தாக்கப்பட்டு பல இளைஞர்கள் படுகாயமடைந்தனர். செல்லையனுக்கு ஆறு மாத கால சிறை தீர்ந்தது.

அடுத்த வருடம் ஏன் பிரச்சனை என்று செல்லையன் ஒதுங்கியிருந்தான். வேள்வியின் போது உயிர் பலி சரி என்றும் ஆகாதென்றும் இரு பிரிவினர் மோதினர்.

கட்டியிருக்கும் ஆட்டுக்கிடாய்களையும் சேவல்களையும் பார்க்கையில் செல்லையனின் மனம் கவலையடைந்தது. வேள்வி செய்யத்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும் மூத்தவர்களை தடுத்துப்பார்த்தான். அவர்கள் கேட்கவில்லை. அதற்கும் அடிபிடி!

எந்த நோக்கத்திற்காக அவன் முன்னைய வருடம் சிறை சென்றானோ அதற்கு எதிரான நோக்கத்திற்காக அவன் இவ் வருடம் சிறை சென்றான்!

எல்லாமே, மனத்தை கட்டுப்பாட்டுக்குள் வைக்கக்கூடிய எமது புத்தியை, நாம் பலப்படுத்திக் கொள்வதிலேயே தங்கியுள்ளது!

மதத்தின் பெயரால் தீ வைத்தல், உடமைகளை சேதமாக்கல், உயிர்பலி எடுத்தல், போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள், எண்ணங்களை கட்டுப்படுத்தவல்ல புத்தியை வலுப்படுத்துவார்களாக!

# தேசிய SMS செய்திகள்

- **ஆஸியில் புதிய தீர்மானம்**

புலம்பெயர்வு சட்டத்தின் மீதான திருத்தங்கள் அங்கீகரிக்கப்படுமானால், தமது கோரிக்கைகள் நியாயமானவை என நிரூபிப்பது புகலிடக் கோரிக்கையாளரின் பொறுப்பாக இருக்கும்.

- **உயர்தரம். புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான திகதி அறிவிப்பு**

க.பொ.உ.தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் 5 - 29ம் திகதி வரையும் அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சையை ஆகஸ்ட் 17ம் திகதி நடத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

- **புதிய போர் விமானங்கள் கொள்வனவு.**

போர் முடிவுற்றுள்ளது என்று கூறிக் கொண்டிருக்கும் இலங்கை அரசு புதிய ஜெட் போர் விமானங்களுடன், ரேடர் வழிகாட்டல் ஏவுகணைத் தொகுதியை கொள்வனவு செய்வதிலும் அக்கறை கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

- **பஸ் கட்டண அதிகரிப்பு தற்காலிக நிறுத்தம்**

எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்காமலிருப்பதற்கு தாங்கள் தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்தின தெரிவித்துள்ளார்.

- **கோட்டைக் கல்லாறில் வேன் எரிப்பு**

முல்லைத்தீவில் இருந்து தேங்காய் வர்த்தகத்தில் ஈடுபடும் கோட்டைக் கல்லாறு சந்தை வீதியினை சேர்ந்த தங்கேஸ்வரன் என்பவரின் லொறியே வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

- **'வரலாற்றுச் சுவடுகள்' கண்காட்சி**



யாழ். பல்கலைகழக வரலாற்றுத்துறை மற்றும் ஊடக வளங்கள் பயிற்சி மையம் இணைந்து ஏற்பாடு செய்த வரலாற்றுச் சுவடுகள் என்னும் புகைப்பட கண்காட்சி புதன்கிழமை ஆரம்பமாகியது.

- **இலங்கைச் சிறுவர்கள் பிரான்ஸ் பிரஜையால் துஷ்பிரயோகம்**

40 இலங்கைச் சிறுவர்கள் பிரான்ஸ் பிரஜை ஒருவரினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படுவது தொடர்பில் தகவல்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது. அதில் 11 பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர்..

- **கோத்தபாய உத்தரவிட்டதற்கான உறுதியான சாட்சி**

தமிழ்த் தலைவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் சரணடைந்தவுடன் அவர்கள் அனைவரையும் கொலை செய்யும்படி கோத்தபயா உத்தரவிட்டதற்கு சாட்சியங்கள் உள்ளன. எப்படியும் வெற்றிபெறுவதற்காக அப்பாவி பொதுமக்களை வேண்டுமென்றே கொலை செய்யவும் தயங்கப்போவதில்லை என பலமுறை அவர் கூறியுள்ளார் என நியூயார்க் பல்கலைக் கழகத்தின் சட்டக்கல்லூரி பேராசிரியர் ரைடன் குட்மேன் தெரிவித்துள்ளார்.

# குறுக்கெழுத்து புதிர் 015

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | 1 | | ■ | 2 | | 19 | 16 | 24 |
| | 3 | | 22 | 4 | | | 17 | |
| 5 | | 21 | | | | லு | ■ | |
| ள | | | | ■ | | | ■ | |
| | | 6 | | 7 செ | | 8 | 23 | |
| 9 | | | | ■ | ■ | | | ■ |
| | 20 | 10 | | | 11 | | | 25 |
| 12 | | | | 13 | | | ■ | |
| | 14 | பு | 15 | | | ■ | ■ | |

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ.*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.

முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இடமிருந்து வலமாக

முடிவுத் திகதி : 03.07.2014

1. தற்கால தாய்மார் தம் அழகு போய்விடும் என தாயினுடைய இதனை கொடுக்க மறுக்கின்றனர்.
2. ஓர் வழி பரம்பரையினரை இவ்வாறும் கூறலாம்.
3. பிழைவிடும் போது முகத்தில் இதனைப் பூசியது போலாகிவிடும்.
4. மரவள்ளி ஓர் நிலக்கீழ் .......... தாவரமாகும்.
5. பெண்களின் வயிற்றில் இதனை சுற்றி விளையாடுவார்கள்.
6. இதன் பின்னால் அனைவருமே ஓடுகின்றோம் (ஆங்கிலத்தில்) - திரும்பியுள்ளது.
7. திருமணமாகாதவளை இவ்வாறு அழைப்பர்.
8. இதிலிருந்து பெரு விருட்சமே வளரலாம்.
9. மூன்றெழுத்து இது 'அம்மா' வாகும்.
10. பிளாஸ்டிக்கின் தமிழ்ப் பெயர்.
11. அருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் இதனைக் குறிக்கும் ஒரு சொல்
12. இல்லாமையைக் குறிப்பது
13. இதன் பின்னரே மழை பொழியும்.
14. சுவைகளில் ஒன்று - திரும்பியுள்ளது.
15. குழந்தை இவ்வாறு அழுதது.
16. ஒளித்தலுக்கு இன்னொரு சொல் - குழம்பியுள்ளது.
17. சரஸ்வதி இதற்கே உரிய கடவுள்.

## மேலிருந்து கீழாக

1. தொடர் நாவல்கள் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கும்.
3. நாம் படிக்கும் இராமாயானத்தை எழுதியவர்.
4. வடிவேலின் இறுதியாக வெளிவந்த படத்தில் அதிகமாக பாவிக்கும் சொல்
9. குழந்தை பாதுகாப்பாக இருக்கும் ஓர் இடம்.
16. காஜல் நடிக்கும் ஓர் விளம்பரம் இதனை இல்லாதொழிப்பதற்காகும். - கீழிருந்து மேல்
18. உப்பு விளைவிக்கப்படும் இடம்
19. உயிர் காக்கும் ஓர் உபகாரம்.
20. பிளிறுவது எது - குழம்பியுள்ளது
21. இதற்காகத் தான் இவ்வளவு அடிபாடும்.
22. கட கட என்பதன் சிறப்புப் பெயர்
11. இதைச் செய்தால் செல்லும் இடமெல்லாம் சிறப்பத்தான் (இரண்டெழுத்தில்)
8. இதைக்கண்டதும் பனி பயந் தோடிவிடும்.
23. மூட்டு வலிக்கு இதைப் பூசலாம்.
24. சனிதோறும் வரும் திருமலை பத்திரிகை
25. பாண்டவர்களின் தாயார்

## குறுக்கெழுத்து புதிர் 014 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 தி | ரு | 17 கோ | ண | 18 ம | 4 லை | லா | ■ |
| 3 க | ண் | ணா | டி | 19 ப | ர | 20 அ | ■ | ■ |
| 5 இ | ணை | ய | 21 ம் | கை | 6 பு | ரி | த | ல் |
| ட் | ■ | 7 லை | க | 8 வ | ஞ் | சி | ன | ம் |
| லி | 9 ம | 22 து | ரா | 16 ர் | ச | ச் | 24 மை | 23 அ |
| 10 சி | லை | ரு | ■ | 11 நீ | ச் | ச | ல் | பி |
| ற் | ■ | 12 வ | டி | வு | க | ர | சி | ம |
| 13 பி | ர | ம் | ம | பு | த் | தி | ரா | ன் |
| 14 நா | ழி | 15 கை | லா | ய | ம் | ■ | ■ | யு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. களைப்படைந்த வேலையாட்கள் மர நிழலில் ஓய்வாக இருந்தனர்.
 1.சுறுசுறுப்பாக 2. அமைதியாக 3. இளைப்பாறுதல்

02. உலகத்திற்கு சூரியன் ஒளி கொடுக்கின்றான்
 1. அருள் 2. வெளிச்சம் 3. இருள்

03. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
1. பாட்டி கடைக்குச் சென்றார். மகன் அலுவலகத்துக்குச் சென்றார்.
பாட்டி : மகன் எனின், கடைக்கு : ..............................
 1. அலுவலகம் 2. அலுவலகத்துக்கு 3. கடைக்கு

04. கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் எழுத்துக்கூட்டத்தை தெரிவு செய்க.
 அ. பாடசாலை கொடி உயர்த்தப்பட்டு பாடசாலைக் கீதம் இசைத்தல்..
 ஆ. வரவேற்புரை நிகழ்த்துதல்.
 இ. முடிவுரை நிகழ்த்துதல்.
 ஈ. குத்துவிளக்கு ஏற்றுதல்.
 உ. நிகழ்ச்சிகள் இடம்பெறுதல்.
 1. அஆஇஈஉ 2. அஈஆஉஇ 3. ஈஅஆஉஇ

05. ராமன் தன் வயலில் அல்லும் பகலும் இடையறாது வேலை செய்ததனால் அதிக விளைச்சலை பெற்றான். இதனை சரியாக குறிப்பிடாதது?
 1. ஊக்கம் உயர்வைத் தரும். 2. முயற்சி திருவினையாக்கும்
 3. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை

06. உடையில் தீப்பிடித்தால் உடனடியாக செய்யக்கூடாதது?
 1. நிலத்தில் விழுந்து புரளுதல்
 2. நனைந்த சாக்கினை வைத்தல் 3. ஓடிச்செல்லுதல்

07. குன்றும் குழியும் என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
 1. நிழலும் உண்மையும் 2. முன்னேற்றமும் இறக்கமும்
 3. மேடு பள்ளம்

08. வயலில் சூடு அடிக்கும் போது களத்தில் "குல்லம்" என அழைக்கப்படுவது?
 1. களகு 2. வைக்கோல் 3. வைக்கோல் குவியல்

09. தாள்களை இணைக்க பயன்படுத்தப்படும் கருவி எது?
 1. துளை கருவி 2, பிணை கருவி 3. துறப்பணம்

10. பின்வரும் சொற்களின் எதிர் மறைச் சொற்களை எழுதுக.
 1. வந்தேன் .............................. 2. பாடுவாய் ..............................
 3. கூவியது .............................. 4. தந்த ..............................

11. உலகத்திற்கு சூரியன் ஒளி கொடுக்கின்றான்
 1. அருள் 2. வெளிச்சம் 3. இருள்

12. பின்வரும் பாடலை வாசித்து விடையளிக்கவும்.
 எம்மைப் போன்ற சிறுவர்கள் எங்கும் என்றும் ஆசையாய்க் கற்றல்
 ஞானம் பண்பு வளரப் பெற்று மங்காத சுக வாழ்வின் ஆதாரம்
 உழைத்திடுவார் நாட்டினுக்கு எதுவுமில்லை எவர்க்கு

13. மங்காத சுக வாழ்வின் ஆதாரமாக அமைவது எது?
 1. சிறுவர்கள் 2. கற்றல் 3. ஞானமும் பண்பும்

14. ஞானம் பண்பு வளரப் பெற்று என்பதன் பொருள் யாது?
 1. அறிவும் நற்பழக்க வழக்கங்களும் மேம்படுதல்
 2. இல்லாத குணங்களைக் காட்டுதல்
 3. அறிவை விட நற்பழக்கவழக்கங்கள் மேம்படுதல்.

15. சுதந்திர தின விழாவின் போது ........... வேடிக்கைகள் காட்டப்பட்டன.
 (வான, வாண)

16. களைப்படைந்த வேலையாட்கள் மர நிழலில் ஓய்வாக இருந்தனர்.
 1.சுறுசுறுப்பாக 2. அமைதியாக 3. இளைப்பாறுதல்

17. ஒரு பூனை இருக்கும் இடத்தில் இருந்து ஒரு மீற்றர் தூரத்தில் ஒரு எலி இருக்கிறது. பூனை ஒரு செக்கனில் 50மீ ஓடும் எலி ஒரு செக்கனில் 15மீ கொண்ட மூன்று பாய்ச்சல் பாயும், பூனை எலியைப் பிடிக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

18. இரண்டு மோட்டார் கார் வண்டிகள் ஓர் இடத்தில் இருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்த்திசைகளில் 200மீ சென்றன. பின்னர் ஒரு கார் வண்டி வலப்பக்கமும் மற்றையது இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 400மீ செல்கின்றன. இப்போது இரண்டு கார் வண்டிகளுக்குமிடையில் உள்ள தூரம் என்ன?

19. களைப்படைந்த வேலையாட்கள் மர நிழலில் ஓய்வாக இருந்தனர்.
 1.சுறுசுறுப்பாக 2. அமைதியாக 3. இளைப்பாறுதல்

20. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தைத் தருக.
 1. ஒற்றைக் காலில் நிற்றல் ..............................
 2. உச்ச குளிர்தல் ..............................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



# தீர்க்கமான முடிவு




ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானையும் புள்ளி மானையும் கண்டது.

அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில் இடது வலது பாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. "எதைத் துரத்தலாம்" என்று தயங்கி நின்றது. பிறகு, "சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்" என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலைதூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி... புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது. ஆனால் புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்துவிட்டிருந்தது.

– முக்கியமான நேரத்தில் முக்கியமாக முடிவை விரைவாக எடுக்க வேண்டும். –

# ஓர் தாலாட்டு



ஆராரோ..., ஆரீரரோ..!
பச்சைகிளியே கண் உறங்கு..
பஞ்சு மெத்த மார்பிலே சேர்ந்து
உறங்கு..!
ஆரீரரோ .. ஆராரோ
மடி மேலே நீ படுத்தா....
மனசெல்லாம் ஊஞ்சல் ஆட
மன்னவனே நீ கண் உறங்கு ..!!
ஆரீராரோ ஏஏ ஆராரோ ..!!
நிலாவே நீ கண் உறங்கு...!!
கனவெல்லாம் கலராக
கலங்காம நீ கண் உறங்கு
கவிதையா நான் பாட்டு படிக்க
கலை மானே நீ நெஞ்சோடு சேர்ந்து
உறங்கு
ஆரீராரோ ஆராரோ..........

– ஸ்டெல்லா –





## சிந்திக்க .. ..

நீ உயர்ந்து மேலே செல்லச் செல்ல,
கீழே இருப்பவர்களுக்கு நீ சிறியவனாய் தோன்றுவதில்
வியப்பொன்றும் இல்லை.
உன் முயற்சியைக் கண்டு எள்ளி
நகையாடுபவர்களை: நீ கண்டு கொள்ளாதே!

# நற் பழக்கங்கள்

குழந்தைகளுக்கு அனுபவம் ஏதும் இல்லை. அவர்களுக்கு நாம் கற்றுத் தர வேண்டும். பெற்றோர்கள் தங்களின் அனுபவத்தால் பல விடயங்களை தெரிந்து நல்லதொரு வாழ்க்கையை வாழ்கிறார்கள். எல்லா பெற்றோரும் தாம் ஓர் இலட்சியவாதியாக இருந்து, தம்மைப் பார்த்து குழந்தைகள் பழக வேண்டும் என்று எண்ண முடியாது.

பெற்றோர்களிடம் நல்ல பழக்கங்கள் இருத்தல் அவசியமாகும். சில பெற்றோர்கள் தாம் சொல்வதைக் கேட்டு தமது இலட்சியத்தை கடைப்பிடிப்பார்கள் என்று உறுதியுடன் சொல்ல முடியாது.



பெற்றோர்களும் குழந்தைகளும் பள்ளியிலும் பள்ளி விடுமுறையிலும் சில குறிப்பிட்ட திட்டப்படி நடக்க வேண்டும். இப்பழக்கம் குழந்தைகளை எப்போதும் கட்டுப்பாடுடன் இருக்கச் செய்யும்.

குழந்தைகளை எப்படி வேண்டுமானாலும் மாற்றலாம். பெற்றோரின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்ற முடியும். குழந்தைகளுக்கு, பெரியோருக்கு கீழ்ப்படிதல் மற்றும் மரியாதை கொடுத்தல் பற்றி சொல்லித் தரவும். குழந்தைகள் தாய், தந்தை, ஆசிரியர் ஆகியோருக்கு கீழ்ப்படிந்து மரியாதையுடன் நடக்க வேண்டும்.

சில பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் மிகவும் இளையவர்கள். அவர்களை சீர் செய்ய முடியாது என்றும் எண்ணுவார்கள். அவர்கள் முதலில் வளரட்டும் என்றும் கூறுவார்கள். இரும்பைச் சூடாக இருக்கும்போது அடித்தால் நாம் விரும்பிய வடிவைப் பெற முடியும். இதனை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 4 சிவப்பு பந்துகளும், 3 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னவ் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.

1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

02. ஒரு மனிதன் ஒவ்வொரு மாதமும் அதற்கு முதல் மாதம் அவன் சேமித்த தொகையை விட ரூ10 அதிகமாக சேமிக்கின்றான். முதலாவது மாத முடிவில் அவன் சேமித்த பணம் ரூ7 ஆகும். அவன் சேமித்துள்ள முழுத்தொகை ரூ2040 ஆக எடுக்கும் காலம் n எனக் கொண்டு

1. முதல் மூன்று மாதங்கள் சேமித்த தொகையைத் தருக.
2. 2040 ரூபாவை சேமிக்க எடுக்கும் காலம் n ஆனது $5n^2 + 2n - 2040 = 0$ எனும் சமன்பாட்டிலிருந்து பெறப்படலாம் எனக் காட்டுக.
3. மேற்கூறிய சமன்பாட்டை தீர்த்து ரூ2040 ஐ சேமிப்பதற்கான காலத்தைக் காண்க.

03. 40செ.மீ நீளமும் 21செ.மீ அகலமும் கொண்ட செவ்வக வடிவ காட்போட் மட்டையாகும். இதன் மத்தியில் இரு நீளப்பக்கங்களையும் தொடக் கூடியவாறு மிகப் பெரிய வட்டம் வரையப்பட்டு, வட்டத்தில் 60 பாகை தவிர்ந்த எஞ்சிய பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

1. வெட்டி அகற்றுவதற்கு முன் காட்போட் அட்டையின் பரப்பளவைக் காண்க.
2. அதில் வரையப்பட்ட வட்டத்தின் ஆரை எவ்வளவு?
3. அகற்றப்பட்ட பகுதியில் கூம்பு ஒன்று செய்யப்பட்டது. எனின், கூம்பின் வட்டவடிவான அடியின் சுற்றளவு யாது?
4. கூம்பின் அடி ஆரை யாது? அடிப்பரப்பு யாது?
5. வெட்டியகற்றப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள பகுதியின் பரப்பளவு யாது?

04. பிரபாவின் வயது அவர் தம்பி துஷியின் வயதிலும் 12 வருடங்கள் கூடியதாகும். மேலும் பிரபாவின் வயது துஷியின் வயதின் இரு மடங்காகும்.

1. பிரபாவின் வயதை x எனவும் துஷியின் வயதை y எனவும் கொண்டு ஒருங்கமை சமன்பாடொன்றை அமைக்குக.
2. சமன்பாட்டினைத் தீர்த்து அவர்களின் வயதுகளை தனித்தனியே காண்க.

05. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $12.5^2 - 2.5^2$

**கணிதம் வழிகாட்டல் :**

**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. நாம் பயன்படுத்தும் பொருட்களைச் செயற்கைப் பொருட்கள், இயற்கைப் பொருட்கள் என வகைப்படுத்தலாம். பின்வருவனவற்றுள் எது இயற்கைப் பொருளாகும்?
   1. நைலோன் 2. பட்டு 3. பொலித்தீன் 4. தெரிலீன்

2. இரும்பைப் பிரித்தெடுக்கும் போது ஊதுலையினுள்ளே சேர்க்கப்படும் மூலப்பொருளாக அமையாதது எது?
   1. சுண்ணாம்புக்கல் 2. கற்கரி 3. ஏமற்றைற்று 4. போட்சைற்று

3. துலக்கப்பட்ட சீமெந்துத் தரையில் உள்ள ஓர் அலுமாரியை 500N கிடை விசையினால் மட்டுமட்டாகத் தள்ள முடியும். அலுமாரி கரடுமுரடான ஒரு தரையில் வைக்கப்பட்டு, அதனைத் தள்ளுவதற்கு 500N கிடை விசை பிரயோகிக்கப்பட்டால் அதன் மீது தாக்கும் உராய்வு விசையானது,
   1. 500N க்குக் கூடியது 2. 500N க்குச் சமனானதாகும்
   3. 500N க்குக் குறைவானதாகும்
   4. தரவுக்கமைய தீர்மானிக்கமுடியாது.

4. மனித உடல் குளிர்ச்சியடைவதற்கு ஏதுவான உடற்றொழிலியல் முறை எது?
   1. குளிர் நீரில் குளித்தல் 2. குளிர் நீரைப் பருகுதல்
   3. சிறிதளவு உணவை உட்கொள்ளுதல்
   4. தோலின் மேற்பரப்பில் இருந்து அதிக அளவில் வியர்வை வெளியேறல்

5. நரம்பின்றிய இயைபாக்கத்தில் ஈடுபடுவது எது?
   1. தசைகள் 2. என்புகள் 3. ஓமோன்கள் 4. கசியிழையம்

7. பின்வரும் சேர்வைகளுள் எது ஒரு வீழ்படிவாகும்?
   1. $KmnO_4$ 2. $CuCO_3$ 3. $CaCO_3$ 4. $Na_2CO_3$

8. ஒரு கலத்தில் காணப்படும் மிகப்பெரிய புன்னங்கம் எது?
   1. கரு 2. புன்கரு 3. நிறமூர்த்தங்கள் 4. இலைசோசோம்கள்

9. இலங்கையின் சில பிரதேசங்களில் நிலக்கீழ் நீரில் உள்ள ஒரு குறித்த மூலகம் மனிதனின் பற்களில் கபில நிறம் ஏற்படக் காரணமாக உள்ளது. அம்மூலகம் யாது?
   1. புளோரீன் (F) 2. குளோரீன் (Al) 3. சோடியம் (Na)
   4. கல்சியம் (Ca)

10. மின்னை உற்பத்தி செய்வதற்காக இலங்கையில் அறிமுகஞ் செய்யப்பட்ட சக்தி மூலம் யாது?
    1. கிளிரிசீடியா 2. உயிர்வாயு 3. சூரிய சக்தி
    4. ஓர் உயர் தரையில் சேமித்து வைத்த நீரின் அழுத்தச் சக்தி

01. திண்மம், திரவம், வாயுக்களினால் ஏற்படும் அமுக்கத்தை நாம் அன்றாடம் அவதானிக்கின்றோம். அமுக்கத்தினால் ஏற்படும் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் பற்றி நாம் அறிவோம்.

1. அமுக்கம் என்றால் என்ன?
2. அமுக்கத்தை அளக்கும் சர்வதேச அலகு என்ன?
3. அதிகரிக்கச் செய்வதினால் பயன்பெறும் இரு சந்தர்ப்பங்கள் தருக.
4. அமுக்கத்தை குறைவடையச் செய்வதன் மூலம் பயன்பெறும் இரு சந்தர்ப்பங்கள் தருக.
5. வளிமண்டல அமுக்கத்தை அளக்கப் பயன்படுத்தும் கருவி யாது?
6. ஆக்கிமிடிசின் கோட்பாட்டைத் தருக.
7. மேலுதைப்பு என்றால் என்ன?

## பாடம் : வரலாறு

01. இலங்கையில் அபயகிரி விகாரையில் மூன்று வருடம் கல்வி கற்றுச்சென்ற சீன யாத்திரிகர்
    1. லீசாச் 2. ஹியுங்சாங் 3. பாகியன் 4. அபூஸயித்

02. எல்லாள மன்னன் விஜிதபுர கோட்டை பாதுகாப்புக்கு வந்த படைத்தளபதி
    1. அபயன் 2. தீஸன் 3. பல்லுகன் 4. மானவர்மன்

03. இருக்கு வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'அயஸ்' என்ற சொல்லின் மூலம் கருதப்படும் உலோகம் எது?
    1. இரும்பு 2. செம்பு 3. பொன் 4. வெள்ளி

04. அசேலனைத் தோற்கடித்து அனுராதபுரத்தை ஆக்கிரமித்தவன் யார்?
    1. சேனன்குத்திகன் 2. எல்லாளன் 3. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் 4. பராந்தகன்

05. இலங்கையில் ஆரியர் காலத்தில் முக்கிய வர்த்தகத் துறைமுகமாக விளங்கியவை
    1. கோகர்ண, மகாதித்த 2. மகாதித்த, ஜம்புகோளம்
    3. ஜம்புகோளம், கோகர்ண 4. கோகர்ண, காலி

06. ஒரு குளத்தில் அணைக்கட்டைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு
    1. கலிங்கல் 2. சுருங்கை 3. அலைதாங்கி 4. தாழ்கலிங்கல்

07. குளத்தின் வான் கதவினால் ஆற்றப்படும் பணி
    1. குளக்கட்டைநீரிப்பிலிருந்துபாதுகாத்தல்
    2. குளத்துக்குள் சேரும் அடையல்,உக்கல்களைத் தடுத்தல்
    3. குளத்தின் மேலதிகநீரைவெளியேற்றல்
    4. குளத்தின் நீரைகால்வாய்க்குவிடுவித்தல்

08. பின்வரும் சோடிகளிலே ஒன்று தவறாக அமைந்துள்ளது. அதனைத் தெரிவு செய்க.
    1. மாணிக்ககங்கை - கதிர்காமம் 2. கல்லோயா - தீகவாவி
    3. மகாவலி கங்கை - விஜிதபுர 4. கலாஓயா - அனுராத கிராமம்

09. கௌடில்யன் என்ற பிராமணனின் ஆலொசனையில் உருவாகிய வம்சம்?
    1. குப்த 2. குஷாண 3. மௌரிய 4. நந்த

பகுதி 02.

01. இலங்கையின் வரலாற்றில் கண்டி இராசதானி அநுராதபுர இராசதானிக்கு அடுத்ததாக நீண்ட காலம் நிலைந்திருந்தது.

1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த இராசதானிகளை அதன் மன்னர்களையும் A,B,C ஒழுங்கில் தருக?

2. பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களை அ, ஆ, இ, ஈ என்ற ஒழுங்கில் எழுதுக
   அ. கண்ணொறுவ போரை வழிநடத்தி வெற்றி பெறல்
   ஆ. 1782 ஆம் ஹியு பொயிட் என்ற ஆங்கிலேயரைச் சந்தித்தல்
   இ. களிக்கோட்டை சமோரின் உதவியுடன் போர்த்துக்கேயரை விரட்ட நடவடிக்கை எடுத்தல்
   ஈ. வீரசுந்தர பண்டாரவை கொன்று நிக்கம்பிட்டிய பண்டாரவை கண்டி பிரதிநிதியாக நியமித்தல்

3. கண்டி இராசதானியை போர்த்துக்கேயர் ஒல்லாந்தரால் கைப்பற்றி கொள்ள எடுத்த முயற்சிகளை முறியடித்து தனது சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள பங்களித்த காரணிகள் இரண்டை விளக்குக?

4. [illegible] தர்மசூரியரின் அரசியல் சமயப் பணிகளை சுருக்கமாக விவரிக்குக.



**ஆசிரியர் : அகிலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் மின் பணியை ...

அதிகாரிகள் சூழல் ஆய்வறிக்கையின் படி இம் மின்நிலையத்தால் சூழலுக்குப் பெருங்கேடு ஏற்படும் எனத் தெரியப்படுத்தப்பட்டால் மின்நிலையப் பணிகளைக் கைவிட வேண்டி வரும் என்றும் உரிய அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய வெப்ப வலுக் கூட்டுத்தாபனமும் இலங்கை மின்சார சபையும் இணைந்து கூட்டுமுயற்சியில் ரிங்கோ பவர் கம்பனி என்ற பெயரில் தொடங்கவிருக்கும் மின் உற்பத்திப் பணிகளால்இலங்கைக்கு பாதகமே அதிகம் என மின்சாரசபையின் பிரதம அலுவலர்கள் பலர் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அந் நிலையத்தின் பணிகளை அரசு முன்னெடுக்கவுள்ள நிலையில் சூழல் ஆய்வு அறிக்கையின் முடிவு என்னவாக இருக்கும் என எதிர்வு கூற முடியாமலுள்ளது.

## கிழக்கில் முஸ்லிம்களால்...

குறித்த பிரரேரணையினை தமிழ் தேசிய கூட்டமைப்பின் மற்றைய உறுப்பினர் இந்திரராசா வழிமொழிந்த நிலையில் குறித்த கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், மேலும் குறித்த தீமானத்தின் மீது சுமார் ஒன்றரை மணிநேரம் விவாதமும் இடம்பெற்றிருந்தது.

குறித்த தீர்மானம் தொடர்பாக அஸ்மின் உரையாற்றுகையில், ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையின் காவல்துறை மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு முன்பாகவே இந்த வன்முறைகள் நடந்தன என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சபையில் மேற்படி பிரரேணை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், பேரவைத்தலைவர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்களினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த விவாதத்தின் போது முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் அழிக்கப்பட்ட போது முஸ்லிம் தரப்புக்கள் மௌனம் காத்தமை தொடர்பாக பலத்த பேச்சுக்கள் எழுந்திருந்த போதும் மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.

## 47l அறைகளுடன் கிழக்கில் ...

இதனால் விலைப்போட்டியை எதிர்கொள்ளவுள்ள உல்லாச விடுதித்துறை அறைகளுக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்கும் விலைக் குறைப்பை மேற்கொள்ள வேண்டும் என நடுத்தர முதலீட்டுடன் உல்லாச விடுதிகளை நடாத்திவரும் உள்ளூர் முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இவ்வருடம் மொத்தமாக 106 புதிய விடுதிகள் அமைக்கப்படவிருப்பதாகவும் அவை 6754 அறைகளை உல்லாசப் பயணிகளுக்காக திறக்கவுள்ள-தாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## அனைத்து தாய்மாருக்கும்...

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 40 தொடக்கம் 50 எனக் கூறப்பட்டுள்ளது.

உரிய காலத்தில் இந் நோய்த்தொற்று கண்டு பிடிக்கப்பட்டால் சேயைத் தொற்றிலிருந்து காப்பாற்ற ஆவன செய்ய முடியும் என இத்திட்டத்தில் பணியாற்றும் வைத்திய கலாநிதி லலினி ராசபக்ச தெரிவித்துள்ளார்.

## அரச குறும்பாதீடு...

அதனைக் கணக்கிட்டு இம்மாதத்தில் தான் தேர்தல்கள் நடைபெறும் என்பதை தெரிந்துகொள்ள முடியும்.

## கிழக்கில் தனியார் பல்கலைக்...

இங்கு கல்வி கற்று பட்டம் பெறுபவர்களுக்கு அவர்களது பிரதேசத்திலேயே வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் இருப்பதால் அவர்கள் கற்பதற்காக நாட்டின் வேறு பிரதேசங்களுக்குப் பயணிக்கவேண்டியிருக்காது எனப் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்கற்கை நெறிகளைத் தொடரத் தேவையான நிதிவசதியினை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவே இலகு தவணைக் கடன் முறையில் வழங்கும் என்று தெரிவித்த அவர் கல்விக் கட்டணங்களைத் தவிர்க்க முடியாது என்றும் மேற்சொன்ன கடன் வசதியின் மூலம் மாணவர்கள் கட்டணத்தைச் செலுத்தி இலகுவாகக் கல்வி கற்கும் வசதிகள் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் புதிய...

வாழ்வாதாரச் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இனங்களிடையே அமைதியையும் சமாதானத்தையும் தாம் விரும்புவதாகத் தெரிவித்த அவர் நாட்டு மக்கள் வாழ்வாதாரச் சிக்கலை எதிர்கொண்டுள்ள இக்காலத்தில் உரிய அமைப்புக்கள் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மாகாணத்தில் தற்போதுவரை புதிய தொழிற்றுறையினை உருவாக்கும் முயற்சிகள் எவையும் இடம்பெறவில்லை. ஆனால் சுதெச மருத்துவத் தொழிற்றுறையொன்று பற்றிய பேச்சுகள் தற்போது நடைபெறுவதாகவும் கூடியவிரைவில் அத்திட்டம் கைகூடலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

விவசாயம் மழையின்றிப் பாதிப்படைந்துள்ளது. நீர்வளங்கள் கடுமையான வெப்பத்தால் வற்றிவருகின்றன. மக்களோ தமது நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றக் கடும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவித்த அவர் வியாபாரங்களை பின்னிரவுவரை திறந்திருக்க முடிவது போருக்குப் பின்னரா சமாதானத்தின் முக்கிய அனுகூலமொன்று என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய ஆங்கில ஊடகமொன்றின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இக் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார்.

## கிழக்கு கடற் பிரதேசத்தில்...

புள்ளிகளில் மசகு எண்ணை ஆய்வுப் பணிகள் இடம்பெறும் எனத் தெரிகின்றது. இவ்வாராய்ச்சிக்கான முழுச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டுள்ள அந் நிறுவனம் இந் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு இலங்கையரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## வறுமையில் கிழக்கு...

தெரிவித்துள்ளார்.

கடந்த 26ம் திகதி மட்டக்களப்பு பாலமுனையில் ஜே.வி.பி யின் மாவட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே இத்தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு, வறுமை கூடிய மாகாணமாக ஊவா மாகாணம் முதலிடத்திலும் இரண்டாவது மாகாணமாக கிழக்கும் தரப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்காமல் வடக்கின் வசந்தம் என்றும், கிழக்கின் உதயம் என்றும் பெயர்களைச் சூட்டினால் மட்டுமே அபிவிருத்தி ஏற்படும் என எண்ண முடியாது. அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் கருத்துக்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

# சர்வதேச விதவைகள் தினம் - 23 ஜூன் 2014

### பாரதி விதவைகள் சங்கம் நினைவுகூர்ந்தது

பாரதிபுரம் பாரதி விதவைகள் நலன்புரிச்சங்கத்தின் பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிட மண்டபத்தில் சங்கத்தின் தலைவி அழகுதுரை சந்திரமலர் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.




இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் பிரதேச செயலாளரின் பிரதிநிதியாக பிரதேச செயலக பெண்கள் பிரிவு உத்தியோக அதிகாரி சியாமா, மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் சிவஸ்ரீ. இ.பாஸ்கரன் குருக்கள், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை இலவச சட்ட உதவி ஆணைக்குழு திருகோணமலை, மூதூர் சட்டத்தரணி ருக்ஷானாவும், பாரதிபுர சமாதான நீதிவான் இ.தர்மலிங்கம், ஓய்வு. பெற்ற ஆசிரியர்கள் மற்றும் மதகுருமார்கள், அயல் கிராம பெண்கள் சங்கத்தின் தலைவி, உறுப்பினர்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட விதவைகள் மற்றும் வாழ்விழந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

மூதூர் பிரதேச செயலக பிரதிநிதியாக கலந்து கொண்ட சியாமா தனது உரையில் இச்சங்கத்தின் செயல்பாடு மிகவும் வரவேற்கத்தக்கதும் இந்த விதவைகள் நலன்புரிச் சங்கத்தினை சமூக சேவை திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு தங்களால் ஆன முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்றும் விரைவில் அதை செய்து தருவோம் என்று கூறியதுடன் கட்டம் கட்டமாக இப்பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் தகுதி அடிப்படையில் வழங்குவதற்கு பிரதேச செயலாளருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

சட்டத்தரணி ருக்ஷனா தனது உரையில் இச்சங்கத்தின் செயல்பாடுகள் விதவைப் பெண்களின் எல்லாவிதமான முன்னேற்றத்திற்கும் எடுத்துக் காட்டாக அமைவதுடன் இப்படி ஒரு தினம் இருப்பதை அநேகமானோருக்கு இப்போது தான் தெரியவந்துள்ளது. அந்த பெருமை இவர்கட்கு உண்டு. இப்பெண்களுக்கான இலவச சட்ட உதவிகளை தாங்கள் வழங்குவோம் என்று கூறினார்.

மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவரும் விதவைகள் சங்கத்தின் ஆலோசகருமான பாஸ்கரன் குருக்கள் தனது உரையில் இந்த விதவைகள் சங்கம் ஆரம்பித்து 2 வருடங்கள் முடிந்துள்ளதுடன் இந்த பெண்கள் பிள்ளைகளுக்கான எந்த வாழ்வாதார உதவிகளும் அரசினால் முன்னெடுக்கப்படவில்லை. இவர்களில் வீடு இல்லாதோர்க்கு வீடும் வாழ்வாதார உதவிகளும்முதியோருக்கான உதவிகளும் வழங்கப்படவேண்டும் என்பதுடன் இப்பெண்களின் உரிமை மீறல்கள் கூடிக்கொண்டு போகின்றன.

இதற்கான சரியான சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதை கேட்டுக்கொண்டதுடன் போரினால் கணவனை இழந்த பெண்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

அடுத்து மாவட்ட செயலாளருக்கு அனுப்புமுகமாக மூதூர் பிரதேச செயலாளருக்கு கொடுக்கும் வகையில் அவரது பிரதிநிதி சியாமாவிடம் சங்கத்தின் தலைவியால் பிரேரணை (மகஜர்) ஒன்று வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து விதவைகள் நலன்புரி சங்கத்திற்கு வாழ்வாதார உதவியாக சமூகசேவையாளர்கள் ஊடாக கிடைத்த பணத்தை ஒருவருக்கு ரூ5000 வீதம் இருவருக்கு அவ்விடத்தில் வைத்து சங்கத்தின் பொருளாளர் செல்வராணியினால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நோன்பை நோற்க இயலாதவர்கள்

2) நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு யுத்தத்திற்குச் சென்றிருந்தோம். எங்களில் நோன்பு நோற்றவர்களும் நோன்பை விட்டவர்களும் இருந்தனர். நோன்பு நோற்றவர் நோன்பு நோற்காதவரையோ, நோன்பு நோற்காதவர் நோன்பு நோற்றவரையோ குறை கூறவில்லை. யாருக்கு சக்தி இருக்கின்றதோ அவர் நோன்பு நோற்பது அவருக்கு சிறந்ததென்றும், யாருக்கு அதற்கு சக்தி இல்லையோ அவர் நோன்பை விடுவது சிறந்ததென்றும் அவர்கள் கருதினார்கள் என அபூ சயீதுல் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

3) ஒரு பிரயாணத்தின் போது நிழலிலே ஒருவரை சூழ்ந்து, மக்கள் கூடியிருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், இந்த உங்களின் நண்பருக்கு என்ன ஏற்பட்டு விட்டது? என கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! அவர் நோன்பாளி என கூறினார்கள். பிரயாணத்தில் நோன்பு நோற்பது நல்ல செயலில்லை. அல்லாஹ் உங்களுக்கு அளித்த அனுமதியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இன்னும் ஒரு அறிவிப்பில்: ஒரு மரத்தின் நிழலிலே ஒருவர் மீது தண்ணீர் தெளிக்கப்படுவதை நபி (ஸல்) அவர்கள் பார்த்தார்கள் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஆதாரம்: நஸாயி)

புனித ரமழான் எம்மை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. அருள் மறையாம் திருமறைக் குர்ஆன் அருளப்பட்ட இப்புனித மாதத்தில் மனிதம் சிறப்புப் பெற நோன்பிருக்க வேண்டுமென்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். "நோன்பு" என்பது அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு உண்ணுதல், பருகுதல், உடலுறவில் ஈடுபடுதல் போன்ற செயல்களை அதிகாலை முதல் மாலை வரை தவிர்த்திருக்கும் ஒரு பயிற்சியாகும்.

நோன்பு மனிதனின் நடத்தைகளைச் சீராக்கி அவனிடம் உருவாகும் மிருக உணர்வுகளை அழித்து மனித மாண்புகளைக் காக்கின்றது. "நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடப்பதற்காக உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது." (2:183)


மேற்படி வசனம், "நோன்பு" என்பது பக்குவத்தை வளர்க்கும் பயிற்சி என்கின்றது. இன்று உலகை உலுக்கி வரும் அநேக பிரச்சினைகளுக்கு நோன்பு ஒரு தீர்வாக இருப்பதை நுணுக்கமாக ஆராய்ந்தால் அறிய முடியும். மனிதனிடமிருக்கும் சில உணர்வுகள் முறையாக நெறிப்படுத்தப்பட வேண்டும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் பாரதூரமான விளைவுகளை உலகம் எதிர்நோக்க வேண்டிவரும் என்பது கண்கூடு. முற்றும் .. ..




# குடை மிளகாய் தந்தூரி சிக்கன்

**தேவையான பொருட்கள்**

கோழிக்கறி – 1-2 கிலோ (எலும்பில்லாதது), மிளகு – 15, பச்சை மிள்காய் - 3, பெரிய வெங்காயம் - 4, இஞ்சி - ஒரு துண்டு, பூண்டு - 6 பல், குடை மிளகாய் - 1, தயிர் - 1 கப், ப்ரஷ் க்ரீம் - 3 மே.கரண்டி, கார்ன்ஸ்டார்ச் - 1 மே.கரண்டி, முட்டை - 1 (வெள்ளைக் கரு மட்டும்), கரம் மசாலாத்தூள் - 1-2 தே.கரண்டி, ஏலப்பொடி – 1-2 தே.கரண்டி, எண்ணெய் - 4



**செய்முறை**

கோழியினை கழுவி சுத்தம் செய்து கொண்டு நீரில்லாமல் சற்று உலரவிடவும்.

மிளகினை வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும். இஞ்சி, பூண்டினை காம்பு நீக்கிய பச்சை மிளகாயுடன் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்தெடுத்து, எண்ணெய்யை வடித்து பிறகு நன்றாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் குடைமிளகாயை கழுவி, விதைகளை நீக்கி, ஒரு அங்குலத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். தயிரினை ஒரு மெல்லிய துணியில் கட்டித் தொங்கவிட்டு, நீர் எல்லாவற்றையும் வடித்து எடுத்துக் கொள்ளவும். ஒரு பெரிய பாத்திரத்தில் அரைத்த வெங்காய விழுது, இஞ்சி பூண்டு விழுது, தயிர், ப்ரஷ் க்ரீம், கார்ன்ஸ்டார்ச், முட்டையின் வெள்ளைக்கரு, நறுக்கின குடைமிளகாய் துண்டுகள், மிளகுத் தூள், ஏலப்பொடி, தேவையான உப்பு அனைத்தையும் சேர்த்து, ஒன்றாய் கலக்கவும். பிறகு அதில் கோழித் துண்டங்களைப் போட்டு நன்கு பிரட்டி சுமார் ஒரு மணி நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து நன்கு ஊறவிடவும். ஒரு சொருகு கம்பியில் கோழித்துண்டங்கள், குடைமிளகாய் துண்டங்கள் என மாற்றி மாற்றி சொருகி, தந்தூரி அடுப்பில் வைத்து கருகாமல் வேகவிட்டு எடுக்கவும். இல்லையெனில், 250 டிகிரி சி க்கு சூடேற்றப்பட்ட ஓவனில் சுமார் 15 நிமிடங்கள் வைத்து எடுக்கவும். அவ்வபோது எடுத்து, வெண்ணெய் தடவி மீண்டும் வேகவிடவும்.



# வெடிப்பை சீர் செய்ய

முடி இழப்பு அதிகரித்துக்கொண்டே போவது வழக்கையாகும். ஹார்மோன் சிக்கல்கள், மருந்துகள், மன அழுத்தம், பாரம்பரியம் போன்றவை "வழுக்கை"க்குக் காரணமாகின்றன. புரதம், இரும்புச் சத்து, அனைத்து வைட்டமின்கள், தாது உப்புகள், அமினோ அமிலங்கள் நிறைந்த உணவுகள் முடியை அடர்த்தியாக்கி, வளப்படுத்தும் தன்மை கொண்டவை.



முடி உதிர்வு, சத்துப் பற்றாக்குறையையும் குறிக்கும். நுனி முடி பிளவுபட்டால் மாதத்திற்கு ஒரு முறை நுனி முடியை வெட்டிவிடுங்கள். ஈரமான முடியை சீப்பால் வாராதீர்கள். தலைக்கு எண்ணெய் தடவும் போது நுனிக்கும் எண்ணெய் தடவுங்கள். கன்டிஷனர்களைப் பயன்படுத்தினால், இதை தவிர்க்கலாம். அப்படி முடியாதவர்கள் கீழ்க்கண்ட வழியை பின்பற்றலாம்.

அடுக்கு செம்பருத்திப் பூ மற்றும் மஞ்சள் கரிசலாங்கண்ணி இரண்டையும் தேங்காய் எண்ணெயில் போட்டு பாத்திர வாயை துணியால் மூடி 15 நாட்கள் வெய்யிலில் வைத்து விடுங்கள். பின்பு இதைத் தடவி வர நுனி முடி பிளவு படாது.



# தையல் கலை

அழகிய கலையான தையலில் நாம் விரும்பியவாறு விரும்பியவாறு ஆடைகளைத் தைத்து அணியலாம். ஆள் பாதி, ஆடை பாதி என்பதால் அழகுக்கு அழகு சேர்ப்பது நாம் அணியும் ஆடை அணிகலன்கள் தான். அதிலும் ரெடிமேட் ஆக எடுப்பதிலும் பார்க்க எமக்கே உரியதான ஸ்டைலில் நாமே எம் ஆடையினை எமது தேவை மற்றும் இயலுமைக்கு ஏற்ப அழகாக்கிக் கொள்ளலாம்.



# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

**சம்பூர் சதீஸின்**

கடந்த வழ தொடர்ச்சி .. ..

தனக்கெதிராக நடைபெறும் சூழ்ச்சிகளில் பறங்கியருடன் சேர்ந்து கொட்டியாபுரப்பற்று வன்னிமையாகிய தாங்களும் இணைந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டு தங்களை கண்டி அரசவைக்கு சமூகமளிக்குமாறு ஓலை அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் இது தனது ஊகம் மட்டுமே என்று கூறினார்.

இதை ஆமோதித்த எமது அரசர் நாம் தற்போது கண்டியரசுடன் பகைமை காட்டும் நிலையிலுமில்லை என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. அத்தோடு பறங்கியருடன் சேர்ந்து நாட்டைத் தாரைவார்க்கும் நிலையிலுமில்லை.



ஆனால் இப்போது முளைத்திருக்கும் இப்புதிய சிக்கலில் தான் அகப்பட்டிருப்பது பற்றியும், தானும் தனது நாட்டு மக்களும் கண்டியரசால் அழிக்கப்படாது இருக்க வேண்டுமானால் தான் கட்டாயம் கண்டிக்குச் சென்றேயாக வேண்டும் என கூறிய போது அதை மறுத்த மந்திரியும் சேனாதிபதியும் தங்களுக்கு கண்டி மன்னனால் ஏதும் துர்சம்பவங்கள் நிகழ்ந்தால் கொட்டியாபுரப்பற்று நாட்டுக்கு தலைவனுமில்லை. அதுமட்டுமல்லாது தங்கள் மருமகப்பிள்ளைக்கு இன்னும் இளவரசர் பட்டம் கட்டும் வயது கூட வரவில்லை.

ஆகவே நாட்டு மக்களின் நலன் கருதி தங்களின் கருத்தை மாற்றி, தங்களின் சார்பாக வேறுயாரையாவது அனுப்பலாம் என்று அறிவுறுத்தினர். முதலில் மறுத்த வன்னிமை பின்னர் அக்கருத்தை ஒருவாறு ஏற்றுக் கொண்டார். கண்டியரசனும் நம்பும் விதமாக இது அமைய வேண்டும் என்று சிந்தித்தவாறு காராளசிங்கனை அனுப்புவது என்று முடிவாகியது.

உடனடியாக திருமங்கலாயில் இருக்கும் தனது மகளின் கணவனான காராளசிங்கனுக்கு மேன்காமத்து வருமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. மருமகன் வந்தவுடனேயே விடயத்தைக் கூறிய அரசன் இச்சிக்கலைத் தீர்க்க உடனே கண்டிக்குப் பயணமாகுமாறு கூறினான். தான் நோய்வாய்ப்பட்டிருப்பதன் காரணமாக தன்னால் கண்டியரசவையில் சமூகமளிக்க முடியாதிருப்பதையும், அதனால் தனது சார்பாக தனது மருமகனை அனுப்புவதாகவும் கடிதம் எழுதப்பட்டு கொடுத்தனுப்பட்டதாக இளஞ்சிங்கன் தெரிவித்தான்.

காராளசிங்கன் கண்டிக்குப் புறப்பட்ட போது தொடங்கிய மைத்துணியின் அழுகை இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதாகக் கூறிய இளங்சிங்கன் தான் வளர்ந்ததும் தனது முதல்வேலை இந்தப் பறங்கியரை கொல்வதே என்று ஆத்திர மேலீட்டினால் அழுது கொண்டே கூறினான். அவனை அணைத்துக் கொண்ட வெற்றிமாறன் குழந்தாய் அழாதே எல்லாம் நல்லதே நடக்கும் என்று நம்பிக்கை வைப்போம்.



நாளை செவ்வாய்க்கிழமை விடிந்ததும் எம் குலதெய்வமாகிய பத்திரகாளி கோயிலுக்குப் போய் வேண்டுதல் செய்வோம் என்று கூறியதுடன் மருதனை விழிப்பாக இருக்குமாறும் ஆலோசனை வழங்கி அனுப்பி வைத்தார்.

படுக்கையில் புரண்டு புரண்டு நித்திரை வராமல் சிந்தனை வசப்பட்ட இளஞ்சிங்கன் மறுநாள் சாரளத்தினூடு வந்த சூரிய ஒளியின் சூடுபட்டே நித்திரை கலைந்தான்.

## கண்டியில் கொட்டியாரப்பற்று பிரதிநிதி

மாமனான வன்னியனார் கொடுத்தனுப்பிய தகவலுடன் சென்ற காரளசிங்கனுக்கு இதுவே முதலாவது கண்டிப்பயணமாகையால், கண்டி இராசதானி எப்படியிருக்கும் கண்டியரசன் செனரத் எப்படியிருப்பான், அங்கு நிலைமைகள் தனக்கு சாதகமாக இருக்குமோ என்றெல்லாம் எண்ணியவாறு தன் மீது பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டிருப்பதை உணர்ந்தான். புறப்பட்டு மூன்றாம் நாள் கண்டி இராசதானியை அடைந்தான். இவ்விடத்தின் மலைவளத்தையும், நதிவளத்தையும் பார்வையிட்டுக் கொண்டே அந்திசாயும் வேளையில் அரண்மனை வாசலை அடைந்து கண்டியரசனுக்கு கொட்டியாரப்பற்று வன்னிமையின் சார்பாக தான் மன்னனைச் சந்திக்க வந்திருக்கும் தகவலை சொல்லியனுப்பினான்.

சிறிது நேரத்தின் பின் திருப்பிய அரண்மனைக் காவலர்கள், காராளசிங்கனிடம் நாளை காலை அரசவையில் அரசன் சந்திக்கும் எண்ணம் கொண்டிருப்பதாகவும், அன்றிரவு விருந்தினர் விடுதியில் தங்கியிருக்குமாறும் அங்கே தங்களுக்குரிய வசதிகள் அனைத்தும் செய்யப்படும் என்றும் கூறி தங்களில் ஒருவனை அழைத்துச் செல்லுமாறு பணித்தனர்.

அங்கே களைப்பு மேலீட்டினால் தன்னோடு வந்த வீரர்கள் உறக்கம் கொண்டிருந்த போதும் காராளசிங்கனால் உடனேயே உறக்கம் கொள்ள முடியவில்லை.

... பாகம் 05 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த ஞாயிற்றுக் கிழமை (22.06.2014) பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி திருகோணமலை மாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்டது.

கயிறு இழுத்தல் இறுதிப் போட்டியில் மாவட்ட செயலக அணியை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக அணி வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.





## அஸ்மி பாலர் பாடசாலை விளையாட்டு போட்டி




திருகோணமலை அஸ்மி பாலர் பாடசாலையின் விளையாட்டு போட்டி ரொட்டவெவ மஸ்ஜிதுல் "ஹதா ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னால் மிக குதூகலமாக கொண்டாடப்பட்டது. அதில் சிறுவர்களுக்கான பல போட்டிகளும் நடாத்தப்பட்டு இறுதியில் பரிசில்களும் வழங்கப்பட்டன.

அஸ்மி பாலர் பாடசாலையின் ஸ்தாபகர் அப்துல்ஸலாம் யாசீ அவர்களின் 31 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் முகமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

## புதிய தலைவர்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவரான என். ஸ்ரீனிவாசன் சர்வதேச கிரிக்கெட் பேரவையின், தலைவராக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற வருடாந்த கூட்டத்தொடரிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் அவுஸ்திரேலியா இதனை எதிர்ப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில் இத்தீர்மானம் தமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும், கிரிக்கெட்டை முன்னேற்றும் பொருட்டு தனது முழுமையான பங்களிப்பை வழங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய உச்ச நீதிமன்ற விசாரணை காரணமாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக செயற்படுவதற்கு என். ஸ்ரீனிவாசனுக்கு தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சாதனைச் சிறுமி



மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பன்சேனை பாரி வித்தியாலயத்தில் தரம் 08இல் கல்வி பயிலும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த இராசலிங்கம் கஜந்தி என்னும் மாணவி அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் 100மீ ஓட்டத்தில் முதலாம் இடத்தையும், 200மீ ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும், நீளம் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்று தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.



அவர் வாழும் பிரதேசமானது காட்டுப் பிரதேசமாகவும் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கின்றது. இவரது பாடசாலைக்கும் வீட்டுக்கும் உள்ள தூரம் அதிகமாக இருந்தாலும் பாடசாலைக்கு நடந்தும் ஓட்டமாகவும் செல்லும் இம் மாணவி மாகாண மட்டத்தில் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதனை பாராட்டி உக்டா நிறுவனம் 25.06.2014 புதன் கிழமை அன்று மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் வைத்து குறித்த மாணவிக்குரிய விளையாட்டுக்கான உடைகள் மற்றும் பாதணிகளை வழங்கியது.

## மலேசிய சுற்றுப் பயணம்

மலேசியாவின் அலோசெட்டார் விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான மலேசிய பகிரங்க மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு ஒரு தங்கப் பதக்கமும் ஒரு வெள்ளிப் பதக்கமும் கிடைத்துள்ளன.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியை 47.34 செக்கன்களில் நிறைவு செய்த மதூஷான் ஜயசேகர தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 2.15 மீற்றர் உயரம் தாவிய திலின கருணாரத்ன வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இப் போட்டிகளில் ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியில் சுப்புன் விராஜ் ரந்தெனியவும் நீளம் பாய்தலில் அமில ஜயசிறியும் பங்குபற்றினர்.

## பட்டிருப்பு வலயம் சாதனை

கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான 19வது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் களுதாவளை மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்து பட்டிருப்பு கல்வி வலயம் கிழக்கு மாகாணத்தில் முதல் நிலையை அடைவதற்கு உந்து சக்தியாக இருந்துள்ளது.

நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 186 புள்ளிகளைப் பெற்று பட்டிருப்பு கல்விவலயம் முதலிடத்தை தட்டிச் சென்றது.

முதல் முறையாக பட்டிருப்பு வலயம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற மாணவர்களையும் ஆசிரியர்களையும் கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று வாழ்த்தியதோடு தேசிய ரீதியிலும் சாதனை பெற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## கால்பந்தாட்ட குழுத் தேர்வு



இலங்கை கால்பந்தாட்ட குழாமுக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சார்த்த தேர்வுகள் நேற்று தொடங்கி மூன்று தினங்களுக்கு கொம்பனித் தெரு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறுகின்றன.

தேசிய அணியின் கால்பந்தாட்டப் பயிற்றுநராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சேர்பிய நாட்டவரான நிக்கோலா கவாஸோவிக் மற்றும் முன்னாள் பயிற்றுநர் சம்பத் பெரேரா ஆகியோர் தேர்வுகளை நடத்துவர்.

இத் தேர்வுகளில் 26 வயதுக்குட்பட்ட தகுதி வாய்ந்த வீரர்கள் மாத்திரமே பங்குபற்ற முடியும் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்தது.

## சர்வதேசச் செய்திகள்

### பெஷாவருக்கான சேவைகள் நிறுத்தம்

எமிரேட்ஸ், எத்திஹாட் ஆகிய நிறுவனங்களைத் தொடர்ந்து கட்டார் எயார்வேய்ஸ் நிறுவனமும் பெஷாவருக்கான சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

பாகிஸ்தான் இன்டர்நெஷனல் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தின் மீதான தாக்குதலை அடுத்து, விமானச் சேவைகள் நிறுத்தப்படுகின்றன.

### மலேசிய விமானம்




மலேசியாவில் கடந்த மார்ச் மாதம் 8ஆம் தேதி காணாமல் போன ஆர்370 விமானம் 100 நாட்களுக்கு மேல் ஆகியும் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதோடு, அந்த விமானத்தின் ஒரு சிறுபகுதிகூட கிடைக்கவில்லை. பலவித ஊகங்கள் மறைந்த விமானம் குறித்து இருந்தாலும், அந்த விமானம் என்ன ஆனது என்பதை யாராலும் இன்னும் உறுதியாக கூறமுடியவில்லை.

### 'கிங் ஆப் பொப்'



உலகையே தன் நடனத்தால் ஆட்டிவைத்த மைக்கேல் ஜாக்சன் இறந்த தினம் புதன் (25.06.2014) ஆகும். அமெரிக்க பொப் இசைப் பாடகர், நடன இயக்குனர், பாடல் ஆசிரியர், தொழில் அதிபர் என பல முகங்கள் கொண்ட இவர், 1958ம் ஆண்டு ஆகஸ்ட் 29ம் திகதி புகழ்பெற்ற இசைக்குடும்பத்தில் பிறந்தார்.

இவர், கிங் ஆப் பொப் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்.

### என் கன்னித்தன்மை பணயம்

நைஜீரியாவில் கடத்தப்பட்ட 300 மாணவிகளை விடுவிக்க தனது கன்னித்தன்மையை இழக்கத் தயார் என்று நைஜீரிய பொப் பாடகி ஒருவர் தெரிவித்துள்ளார். நைஜீரியாவின் சிபோக் பகுதியில் உள்ள பள்ளி விடுதி ஒன்றில் நள்ளிரவில் புகுந்த, போகோகரம் தீவிரவாதிகள், 300 மாணவிகளை கடத்திச் சென்றனர். சர்வதேச அளவில் பல அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தசம்பவத்தை அடுத்து, ராணுவம் மற்றும் விமானம் மூலம் தேடுதல் வேட்டை நடத்தியும், மாணவிகளை கண்டுபிடிக்கமுடியவில்லை.

### தேசிய நலனுக்காகவே – மோடி

அரசு பதவியேற்று 100 மணி நேரத்திற்குள் குற்றச்சாட்டுகள் வந்துள்ளதாகவும், தேசத்துக்காக உழைப்பதால் அந்த குற்றச்சாட்டுக்களை கண்டு கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். "இந்த ஒரு மாதத்தில் தேசிய நலன் கருதியே அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன. மாநில முதல்வர்களுடன் இணைந்து செயல்படத் தயாராக இருக்கிறேன். சில துறைகளில் எங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

### அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

ஹாலிவுட் நடிகர்கள் ஜேம்ஸ் ரோன்கோ, சேத்ரோஜன் நடிப்பில் காமெடி படம் ஒன்று விரைவில் வெளியாக உள்ளது.

அதில் வடகொரியாவை அமெரிக்கா தாக்குவது போலவும், வடகொரியாவின் ஏவுகணைகளையும் ராணுவ தளங்களையும் அமெரிக்கா அழிப்பது போலவும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மேலும் வடகொரியா ஜனாதிபதி கிங்ஜாங்வுனை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்து அவரை அமெரிக்க உளவுப்படையினர் கொல்ல முயற்சிப்பது போலவும் காட்சி எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

### கருணைக்கொலை செய்தவர் கைது



பிரான்ஸ் நாட்டை சேர்ந்த மருத்துவர் ஒருவர் 7 நபர்களை கருணைக் கொலை செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

கருணைக் கொலை என்பது பிரான்ஸ் நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும், இதற்கு அந்நாட்டு ஜனாதிபதி பிரான்ஸிஸ்கோ ஹோலண்டேவும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

### நாடு விட்டு நாடு 1 நிமிடத்தில்

ஸ்பெய்ன் நாட்டிலிருந்து போர்த்துக்கல் நாட்டுக்கு கம்பி மூலம் அதுவும் சுமார் ஒரு நிமிடத்தில் பயணம் செய்ய முடியும். ஸ்பெய்ன் நாட்டின் ஸன்லுகார் டி கார்டியானா நகருக்கும் போர்த்துக்கலின் அல்கோட்டின் நகருக்கும் குறுக்காக ஓடும் கார்டியானா ஆறு இரு நாடுகளையும் பிரிக்கின்றது. இதனைக் கடந்து செல்ல கப்பல் பயன்படுத்தப் படுகின்றது. இருப்பினும் வேகமாக கடந்து செல்ல லிமிட்டட் ஸீரோ' எனும் நிறுவனம் குறித்த ஆற்றுக்குக் குறுக்காக சுமார் 800மீ கம்பியை இணைத்து புதிய பயண வழியை அறிமுகம் செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

29 ஜூலை 2012 — 100 — 28 ஜூன் 2014

# கிழக்கில் தனியார் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படும்

## பேராசிரியர் சானிகா ஹிரிம்புறுகம

கிழக்கில் அரச பங்களிப்பற்ற உயர்கல்வி நிறுவனமொன்று உருவாக்கப்படும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவி பேராசிரியர் சானிகா ஹிரிம்புறுகம தெரிவித்தள்ளார்.

அரச பல்கலைக்கழகங்களுக்குள் நுழையமுடியாத மாணவர்களுக்கான கல்வியை வழங்கும் பொருட்டே மேற்படி உயர்கல்வி நிலையம் கிழக்கில் அமையவுள்ளதாக அவர் தெரிவித்தார். இத்திட்டத்திற்கு நிதியளிப்பதற்குப் பலர் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர் உயர் கல்வி அமைச்சாலும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவாலும் மேற்பார்வைசெய்யப்படும் இவ்வுயர் தரம் கொண்ட கல்வி நிறுவனம், கிழக்குப் பிரதேச மாணவர்களுக்கு நன்மைபயக்கத்தக்க கல்விப் பாடங்களைத் திறனும் அனுபவமும் மிக்க விரிவுரையாளர்களைக் கொண்டு வழங்கவுள்ளது எனக் கூறினார்.

இக்கல்வி நிறுவனத்தில் பிரதான பாடங்களாக உல்லாசப்பயணத்துறை, விருந்தோம்பல் துறை மற்றும் கணணித் தொழில்நுட்பம் போன்றவை கற்பிக்கப்படவுள்ளன..........

13

# 471 அறைகளுடன் கிழக்கில் 11 உல்லாச விடுதிகள்

**மட்டக்களப்பு 09**
**திருமலை 09**
**அம்பாறை 01**

கிழக்கு மாகாணத்தில் இவ்வருடம் 11 புதிய உல்லாச விடுதிகளை அமைக்கும் விண்ணப்பங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் முறையே ஒன்பது உல்லாச விடுதிகளை அமைப்பதற்கும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு உல்லாச விடுதியினை அமைப்பதற்கும் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

மேற்போந்த 11 விடுதிகளிலும் மொத்தமாக 471 அறைகள் உல்லாசப் பயணிகளுக்காக உருவாக்கப் படவுள்ளன........

13

# கிழக்கில் முஸ்லிம்களால் முடியாததை வடக்கில் தமிழர்கள் நிறைவேற்றியுள்ளனர்

## ஒன்றுபட்டுச் செயற்படவும் அழைப்பு

அளுத்கமை உட்பட நாட்டின் பலபாகங்களில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபைஅத்தாக்குதல் தொடர்பாகக் கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளதுடன் மேற்படி வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு மாகாண சபையால் அவ்வகையானதொரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியாத அபாக்கிய நிலை காணப்படும் வேளையில் சிறிய நிர்வாக அலகுகளான பிரதேசசபைகளும், நகரசபைகளும் கிழக்கில் இத்தாக்குதலுக்கு எதிரான கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தினை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் அஸ்மின், வடமாகாணசபையின் 11வது அமர்வு இன்றைய தினம் நடைபெற்றிருந்த போது முன்மொழிந்திருந்தார்.

13


English....

A1, A2, B1

FOR FOREIGN VISAS

Office Admis...

FOR A/L LEAVERS

Business English
Office Administration
Secretarial Practices

DURING SEPTEMBER 2014

One month induction Course

Veal Business College

026-2227622 / 0770203201

No.159A, Sea View Road,
Trincomalee


# மட்டக்களப்பில் புதிய தொழிற்துறைகள் எவையும் உருவாக்கப்படவில்லை

## வர்த்தக சம்மேளனத் தலைவர் கே குகதாசன் தெரிவிப்பு




புதிய தொழிற்துறை நடவடிக்கைகள் எவையும் மட்டக்களப்பில் தற்போது முன்னெடுக்கப் படவில்லை எனத் தெரிவித்துள்ள மட்டக்களப்பு மாவட்ட கைத்தொழில் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு.கே.குகதாஸ் மட்டக்களப்பு மக்கள்....

13

# இலங்கைக்கடலுக்கு அடியில் பாரிய நில வெடிப்பு ???

இலங்கையின் கடலுக்கு அடியில் பாரிய நிலவெடிப்பு ஏற்பட்டிருப்பதால் இலங்கை நிலநடுக்க அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக வேல்ட் தமிழ் வின் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகவலைப் புவியியல் வல்லுனரான பேராசியரியர் திசநாயக்கா விடுத்துள்ளதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இலங்கையின் கடற்பகுதி மற்றும் நிலநடுக்கங்கள் தொடர்பாக ஆராய்ந்துவரும் பேராசிரியர் திசநாயக்க இலங்கைக்குரிய பூமித்தகட்டில் சுமார் 500 முதல் 600 கிலோமீற்றர் தூரத்தில் தெற்குக் கடலில் இவ் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் செய்தியுள்ளார்.

இலங்கையின் தெற்கு மற்றும் தென்மேற்குத் திசைகளில் புதிய புவியடுக்கு உருவாகிவருவதால் இந்த வெடிப்பு ஏற்பட்டு வருவதாகவும் அதனால் இலங்கை அதிகளவான நிலநடுக்கத்தை எதிர்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்திருப்பதாகச் செய்தி தொடர்கின்றது.

**மலைமுரசு** தனது நூறாவது பதிப்பை இன்று வெளியிடுகின்றது.

நீண்ட ஒரு பயணத்தின் முதலாவது மைல்கல்லைத் தனது நூறாவது இதழில் மலைமுரசு தாண்டிச் செல்கின்றது.

உலகில் மேம்பட்ட துறைகளில் கல்வித்துறைக்கு அடுத்தபடியாக அமைந்திருப்பது ஊடகத்துறைதான். அவ்வாறான மேம்பட்ட துறையான உலக ஊடகத் துறைக்குத் தனது பணியை மலைமுரசும் ஆற்றியிருப்பது கவனிக்கப்படவேண்டியதே.

இந்த இருவருடப் பயணத்தில் ஆயிரக்கணக்கான தடைகளை, அவை பொருளாதாரம் சார்ந்ததாக இருந்தாலும் அல்லது ஏனைய புறக்காரணிகள் சார்ந்ததாக இருந்தாலும், தகர்த்து முன்செல்வதற்கு மலைமுரசைச் சார்ந்தவர்களின் குலையாத மனவுறுதியே காரணமாயிருக்கின்றது.

இக்கணத்தில் எவ்வித நிதிஊக்குவிப்பையும் எதிர்பார்க்காமல் எமக்காக எழுதிக் கொண்டிருப்பவர்களுக்கும், செய்திகளைச் சேகரித்துக்கொண்டிருப்பவர்களையும், புலமைசார் கல்வியியலாளர்களையும், சட்ட ஆலோசனையை வழங்கும் சிரேட்ட சட்டத்தரணிக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். உங்களால் மட்டுமே மலைமுரசின் பயணம் செழிப்புற நிகழ்கின்றது. நிலையான வாசகர் தளத்தை உருவாக்கி அதன் அங்கங்களாக இருக்கும் எம்மினிய வாகசர்களே! உக்களது ஆதரவே எம் உயிர்நாடி!

எந்த விதமான பின்புலங்களும் இன்றி, தனிமனித ஆளுமையொன்றின் பின் அணிதிரண்ட சிறு குழுவொன்றினால் இதனைச் சாதிக்க முடிந்திருப்பது மலைமுரசின் உறுதியையும் அதனைச் சார்ந்தவர்களின் குலையாத அர்ப்பணிப்பையும் பறைசாற்றி நிற்கின்றது.

இயற்கையின் இடைவெளியொன்றை நிரப்பவென உருவாக்கப்படும் கட்டமைப்பில் மலைமுரசும் தனது பங்கிற்கான கல்லொன்றாக இணைந்துகொண்டுள்ளது.

எவ்வித பின்புலங்களும் இல்லாதிருப்பதால் கேள்விக்குட்படுத்தப்படாத நியாயமான போக்கினை மலைமுரசு கொண்டிருப்பது அதன் பலமாக அமைகின்றது. இதன்பால் நண்பர்கள் எதிர்ப்பவர்களாகவோ, எதிர்ப்பவர்கள் நண்பர்களாகவோ மாறிக்கொண்டேயிருக்கின்றனர். மாற்றம் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. அம்மாற்றம் சார்ந்த பாகுபாடற்ற கண்ணோட்டத்தை மலைமுரசு செலுத்திக் கொண்டே தன் பயணத்தைத் தொடர்கின்றது.

ஊடகத்துறைக்காக தம் இன்னுயிரையீந்த ஈழத்தவர் அனைவரையும் நினைவுகூர்ந்தபடி...

இப்பயணம் தொடரும்.... மைல் கற்களாக.....

**எம் நன்றிகள்...**

**இயங்க இடம் தந்த இயற்கைக்கும்....**

**இயங்க உயிர்தந்த உங்களுக்கும்..**

ஆசிரியர்

# கிழக்கில் கல்வி சாரா ஊழியர் நியமனம் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவரா?

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்ப மாகாண அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதனையடுத்து அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

இத் தகவல்கள் முதற்கட்டமாக பாடசாலை தொழிலாளிகள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் ஆகியோர் தொடர்பானதாகக் காணப்படுகின்றது.

சுமார் 300 வெற்றிடங்கள் மேற்கூறப்பட்ட இரு தொழிலாளிகளுக்கும் கிழக்கில் காணப்படுவதாகத் தெரிவித்த அமைச்சக வட்டாரங்கள் சாதாரண தரப்பரீட்சையில் 2 விசேட சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றவர்கள் கருத்திற் கொள்ளப்படுவர் எனவும் தெரிவித்துள்ளது. அதேவேளை கிழக்கு மாகாண அமைச்சரவைத் தீர்மானப்படி இந் நியமனங்களில் இன விகிதாசாரம் முன்வைக்கப்பட்டால் தமிழர் புறக்கணிக்கப்படும் அபாயமும் உள்ளதாக சிலர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org